விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 27 ஞாயிற்றுக்கிழமை (12.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267


ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## கிளிநொச்சி சாந்தபுரத்தில் நேற்று 281 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி சாந்தபுரத்தில் 281 குடும்பங்கள் நேற்று மீள்குடியமர்த்தப்பட்டன. கிளிநொச்சி சாந்தபுரத்தில் மக்கள் மீள்குடியேறுவதற்கான அனுமதியை இராணுவத்தினர் நீண்ட காலமாக மறுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று 281 குடும்பங்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதன்போது நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன இராஜகுரு மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொண்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட உதவிப் பொருள்களை வழங்கி வைத்தனர். (ந-5)



# இலங்கை அரசியலமைப்புத் திருத்தம்

# அமெரிக்கா கடும் சீற்றம்-கண்டனம்



## இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

(வாஷிங்டன்)

இலங்கையின் அரசியல் அமைப்பில் செய்யப்பட்டுள்ள புதிய திருத்தங்களை அமெரிக்கா கடுமையாக விமர்சித்துள்ளது. இத் திருத்தங்கள் ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதாக அமெரிக்கா நேற்று கூறியுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பௌசி இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அமைச்சர் யாழ்.மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள் மற்றும் எதிர்வரும் டிசம்பர் 26 ஆம் திகதி யாழ்.குடாநாட்டில் கொண்டாடப்படும் பாதுகாப்புத்தினம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள், அரசஅதிகாரிகளுடன்கலந்துரையாடவுள்ளார்.

இக் கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் (20 ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில்

## இளவாலை ஹென்றிஸ் கல்லூரி 2 ஆவது முறையாகச் சம்பியன்

(கொழும்பு)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியின் இளைவாலை ஹென்றியரசர் கல்லூரி சம்பியனானது.

அத்துடன் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நேற்றுக் கொழும்பில் ஆரம்பமானது.

இதில் நேற்று நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி தொடர்ந்து இரண்டாவது முறையாகச் சம்பியனானது.

அத்துடன் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி பலமிழந்து போகாது ரணில் விக்கிரமசிங்க கர்ச்சிப்பு

(கொழும்பு)

கட்சியின் தீர்மானங்களுக்கு முரணான வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வலுவிழக்கச் செய்ய சில சக்திகள் முயற்சி மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டிய இந்த முயற்சிகள் முறியடிக்கப்படும் எனவும் கட்சி ஆதரவாளர்களை திசை திருப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் அமைப்பு திருத்தங்களுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்ற கட்சியின் தீர்மானத்துக்குச் சிலர் முரணாகச் செயற்பட்டுள்ளதாகவும் அவ்வாறான நபர்களுக்கு எதிராகக் கட்சியின் செயற்குழு கடுமையான நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எங்கள் உறவுகளை மீட்டுத் தாருங்கள்
# சந்திரகுமார் எம்.பியிடம் கோரிக்கை



(கொழும்பு)

பேரின்போதும் பின்னரும் காணா மற் போனோரையும் படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு முகாம்களில் இருக்கும் உறவினரையும் மீட்டுத் தருமாறு சாந்தபுரத்தில் நேற்று மீளக் குடியேறிய மக்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரிடம் உருக்கமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

சொந்த வீட்டுக்குச் செல்வதையிட்டு நாங்கள் சந்தோசப்படுகிறோம். இப்போதுதான் எங்களுக்கு சாப்பாடே சமிக்கிறது. எங்களுடைய காணிகளில் மீண்டும் நாங்கள் குடியேறலாம் என்று தெரிவிக்கப் பட்ட பின்பே எங்களால் நிம்மதியாகச் சாப்பிட முடிந்தது. இனிமேற்தான் நாங்கள் நிம்மதியாகத் தூங்கப் போகிறோம். ஆனால் எங்களின் பிரிந்த உறவுகள் மீண்டும் எங்களிடம் வந்து சேர்ந்தால்தான் எமக்கு முழுமையான நிம்மதி கிட்டும் என்று இந்த மக்கள் தெரிவித்தனர்.

தங்களின் உறவுகள் மீண்டும் ஒன்றாகச் சேரும் காலத்தை இந்த மீள் குடியேற்றத்தைச் சாத்தியப் படுத்தியதைப் போல அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த மக்கள் சந்திரகுமார் எம்.பியிடம் கேட்டுக்கொண்டனர்.

நிச்சயமாக உங்களின் கண்ணீருக்கும் கவலைகளுக்கும் ஒரு முடிவு வரும். உங்களுடைய பிள்ளைகளையும் கணவன்மாரையும் விரைவில் நாம் ஒன்றுசேர்ப்போம். காணாமற் போனோரைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி நாம் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறோம். நிச்சயம் உங்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் உதவுவோம் என்று சந்திரகுமார் எம்.பி. அங்கு தெரிவித்தார். (ந)

# 2030 ஆம் ஆண்டின் ஜனாதிபதி நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

2030ஆம் ஆண்டில் நாட்டின் தலைவராக வரும் வகையில் இலங்கை ஜனாதிபதியின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். நாமல் 2030 என இந்த இணையத்தளத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.

இதில் நாமல் தொடர்பான தகவல்களும் அரசியல் அம்சங்களும் உள்ளடங்கியுள்ளன. எனினும் ஏனைய கட்சி உறுப்பினர்களை பாதிக்கும் என்பதற்காக இந்த இணையத் தளத்தை பிரசாரப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்ட போதும் நாமலின் இணையத் தளம் பிரசாரப்படுத்தப் பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே நாமலை ஜனாதிபதியாகக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவிக் காலத்தின் வரையறையை நீடித்தார். என்ற குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# எனது தாய் இறந்த முள்ளிவாய்க்காலில் எனது சடலத்தை புதைக்கலாம்

## தமிழ் அரசியல் கைதியின் உருக்கமான வேண்டுதல்

நான் இறந்த பின்னர் என்னை என் தாயார் இறந்த முள்ளிவாய்க்காலில் கொண்டுபோய் அடக்கம் செய்யுங்கள் என அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதி கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் தென்மராட்சியைச் சேர்ந்த ஆனந்தராஜா என்ற கைதி பல வருடங்களாக விசாரணைகளின்றி சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு விடுதலைப் புலி சந்தேக நபராக அவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறி இற்றை வரை விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது தாய் கடந்த வருடம் முள்ளிவாய்க்காலில் இறந்து விட்டார். தந்தை இறந்து பல வருடங்களாகின்றது. தற்போது உறவினர்களும் எங்குள்ளனர் என்று தெரியாத நி[illegible]யில் தான் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறும் மேற்படி கைதி தான் விரைவில் சுயநினைவை இழக்கலாம் என்று கூறியுள்ளார்.

அவ்வாறு சுயநினைவை இழந்த நிலையில் இறந்து போனால் மனிதாபிமானமுள்ளவர்கள் எனது வேண்டுதலை நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-2)


## கண்ணீர் அஞ்சலி

### யதகுலசிங்கம் வைகுந்தன்



அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி அறிந்து கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சிறி சிவராம் ரேடர்ஸ்
இல.322/C ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(2455)




## குழந்தை பராமரிப்பாளர் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்.தம்பதியினருக்கு இரு குழந்தைகளைப் பராமரிக்கவும் வீட்டு வேலைகளில் உதவி புரியவும் 18 தொடக்கம் 30 வயது வரையான நற்பண்புடைய பெண்ணொருவர் தேவை.

தொடர்பு : 0773819855
0773456779

(C-1148)

## றூம் வாடகைக்கு

சகல வசதிகளையும் கொண்ட றூம் வாடகைக்கு உண்டு. படிக்கின்ற, வேலை புரிகின்ற பெண்களுக்கு மட்டும்.

தொடர்புக்கு: இல.24, பலாலி றோட், 2-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
T.P.: 0212227684

(C-1147)

## வேலை ஆட்கள் தேவை

புடவை விற்பனை நிலையத்திற்கு 2 பெண்பிள்ளைகளும், ஒரு ஆணும் (40-45 வயதிற்குட்பட்டவர்) தேவை. அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புக்கு:-

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் x) யாழ்ப்பாணம்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES &
## EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

BCHS — Eisc

ஆகிய இவ்விரு சகோதர நிறுவனங்களும் இணைந்து எமது நிறுவனத்தின் மூலம் London (UK) / USA / Canada / Newzealand / Australia போன்ற நாடுகளில் உயர் கல்வியினைக் (பட்டப்படிப்பு) கற்பதற்கு சென்ற மாணவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

எமது யாழ். கிளையிலே அடிப்படைக் கற்கைநெறிகளை நிறைவுசெய்து இவ்வருடத்திலே இதுவரை (UK) London Visa பெற்று சென்ற பல மாணவர்களிற் சிலர்




AFTER G.C.E A/L OR O/L

காலவிரயமின்றி நீங்கள் ஒரு சர்வதேசத்தரம் கொண்ட பட்டதாரியாகி உங்களின் எதிர்காலத்தை வளமாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்.

ஆகக் கூடியது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி

6 Months / 3 Months
Foundation Diploma@BCHS Jaffna
IELTS & English @BCHS Jaffna

$2^{1/2}$ Years
Diploma & Degree @ London(Uk)/USA
Canada/ Australia / Newzealand

[illegible]துவரை எமது சேவையினூடாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது உயர்கல்வியினை கற்[illegible]ாக வெளிநாடு சென்றுள்ளார்கள். நீங்களும் பயனடைய இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

[illegible]or, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road) Jaffna.
(ஆரிய[illegible]ச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
[illegible]el :021 2224550, 0777585913

No.30 1/14, W A De Silva Mw, Colombo - 06
Tel : 0112500207, 0777222422, 0714299935


# மரண அறிவித்தல்

## திருமதி உமாமகேஸ்வரன் நாகேஸ்வரியம்மா



வட்டு வடக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாமகேஸ்வரன் நாகேஸ்வரியம்மா 11.09.2010 நேற்று சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா பவானியம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (ஆசிரியர்) பாக்கியம் தம்பதியரின் மருமகளும் வாகீசன் (பிரான்ஸ்), அருளீசன், தமிழரசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவபாலன் (பிரான்ஸ்), சுதர்சினி (பிரான்ஸ்), தபோதினி ஆகியோரின் மாமியும் வரதராசா, தவராசா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்), சிவபெருமான், சிவராசா, ஆனந்தராசா, (பிரான்ஸ்), ஆகியோரின் மூத்த சகோதரியும் பண்டிதர் கடம்பேசுவரன், கதிர்காமேஸ்வரன் (பிரான்ஸ்), செந்திலேஸ்வரன், கணேஸ்வரன் (கணக்காளர் -பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் அஜந்தினி, லோஜிகா, ஜீவனா, அபிதா, இனியவன், நிருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12.09.2010 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
(அருளீசன் -மகன்)

T.P:-0773618507
0217900924

(2454)

# மிகப் பாரிய சர்வதேச நிதியின் சக்தி

ஒறிக்ஸ் குறூப் ஒப் கம்பனி ஆனது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒறிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

## நிலையான வைப்புகளுக்கு வருடத்திற்கு +11.25% (வ.மொ.வ.வீ.) அதிகூடிய வட்டி

12 மாதங்கள் நிறைவான வட்டி (வ.மொ.வ.வீ. 11.25%)

**லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்**

LOLC குறூப் கம்பனி

100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய.

LOLC அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட் ஆனது 1988, 78ஆம் இலக்க நிதிக் கம்பனி சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்ட பிச் ரேட்டிங் லங்கா கம்பனியிடம் A-(lka) தரத்தைப் பெற்றுள்ளது. இணைக்கப்பட்ட திகதி டிசெம்பர் 13, 2001.

அவசர அழைப்பு :
077 2317575
077 2370992


# இளமை தரும் ஒரேஞ்

இளமையுடன் வாழ எவருக்குத் தான் ஆசை இருக்காது. தற்போது 20 வயது இளைஞன்கூட நாற்பது வயது அடைந் தவன் போலக் காட்சியளிக்கிறார்கள். தலை முடி நரைக்கிறது.தோலில் சுருக்கம் ஏற்படுகிறது.கண்கள் குழிவிழுந்து காணப்படுகின்றன.என்றும் நல்ல திடகாத்திரமான இளைஞர்களை இன்று காணமுடியவில்லை. இதற்குக் காரணம் இரசாயனம் கலந்த உணவுகள், அரை வேக்காட்டு உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், குளிரூட்டப்பட்ட உணவுகள், சத் தற்ற உணவுகள், உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாமை போன்றவையே. இன்றைய மாணவ சமுதாயத்திற்கு கல்விச் சாலைகள் சிறைச்சாலைகளாக உள்ளன.பாடத்திட்டம் அனைத்தும் மூளை சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி, விளையாட்டு என்ப தேயில்லை.மேலும் வீட்டிற்கு வரும் குழந்தைகளைக் கட்டாயப்படுத்தி சிறப்பு வகுப் புக்கு அனுப்புகிறார்கள். இதுபோல் விடுமுறை நாட்கள் பெரும்பாலும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளிலேயே கழிந்து விடுகின்றன.

அடுத்த தெருவிற்குச் செல்லவேண்டும் என்றாலும் வாகனத்தில் தான் செல்கிறோம். நடை என்பது பலருக்கு நோயின் தாக்கத்திற்குப் பின்னர் தான் தெரியவரும்.இப்படி சத்தற்ற உணவும் உடற்பயிற்சியின்மையும் ஒரு மனிதனை முழுமையின் வாசலுக்கு எளிதில் அழைத்துச் செல்லும்.உடற்பயிற்சி செய்வதுடன் உடலுக்குத் தேவையான சத்துக்களை நேரடியாகக் கொடுக்கும் பழங் களையும்,பழச்சாற்றுக்களையும் சாப்பிட்டு வந்தால் உடலை என்றும் இளமையாக வைத்திருக்கலாம்.

எங்கும் எப்போதும் கிடைக்கும் ஒரஞ்சுப் பழச்சாற்றின் மருத்துவக் குணங்களையும் ,அதன் சத்துக்களையும் அறிந்து கொள் வோம். சில உணவுகள் சாப்பிட்டதும் அவை உடலில் சில மாற்றங்களை உண்டுபண்ணி பித்த நீரை அதிகம் சுரக்கச் செய்கின்றன. இதனால் உடலில் உள்ள செல்களின் செயற்பாடுகள் முடக்கப்படுகின்றன.இந்தப் பித்த நீர் இரத்தத்தில் கலந்து இரத்தத்தில் உள்ள இரும்புச் சத்துக்களை அழித்து விடுகிறது.



இதனால் இரத்தம் அசுத்தமடைகிறது. பித்த நீர் தலைக்கேறி கண்பார்வை நரம்பு களைப் பாதிப்படையச் செய்கிறது.மேலும் ஞாபகமறதி ஏற்படுகிறது. சருமம் பாதித்து சுருங்கச் செய்கிறது.தலைமுடி நரைக்கச் செய்கிறது.இதுபோல் இனிப்பு மற்றும் கொழுப்பு உணவுகளை 300 கலோரி அளவு சாப்பிட்ட பின்னர் ஒரு மணிநேரம் கழித்து இரத்தத்தை பரிசோதித்துப் பார்த்தால் பித்தநீர் அதிகம் சுரந்து இரத்தத்தில் கலந்திருப்பதை அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

இந்த பித்த நீர் அதிகம் சுரப்பதைத் தடுக் கவும் உடலுக்குத் தேவையான அனைத்து சத்துக்களையும் தரும் பழச்சாறுகளில் ஒரஞ் சும் ஒன்று. ஒரேஞ் பழச்சாறு சாப்பிட்ட வர்களின் இரத்தத்தில் பித்த நீரின் அளவு குறைவாக இருக்கிறது. ஒரேஞ்சு சாறில் உள்ள விற்றமின் சி ,நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை புத்துணர்வுடன் இருக்கச் செய்கிறது. இதனால் உடலில் அணுக்கள் நன்கு செயல்பட ஆரம்பிக்கும். உடலும் முதுமை அடையாமல் இளமைத் தோற்றத் துடன் காட்சியளிக்கும். ஒரு சிலருக்கு திடீ ரென்று குடல் புண், தொண்டைப் புண் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் புரோய்லர் கோழி வறுவல், ஐஸ்கிரீம் மற்றும் கேக் வகை களை அதிகமாக சாப்பிடுவதே. இதனால் உடல் சூடாகி வாயுக்கள் சீற்றமாகி புண்களை ஏற்படுத்துகிறது. சில சமயங்களில் இது புற்று நோயாகக் கூட மாறலாம். இருதய நோய் களுக்கும் இந்த உணவு வகைகளே காரண மாகின்றன. இத்தகைய பாதிப்புகளிலிருந்து விடுபட இந்த உணவுகளை தவிர்த்து தினமும் 150 மி.லி ஒரேஞ் சாறை அருந்தி வரவேண்டும்.


# தற்போது, வங்கியொன்று அடகிற்கு வழங்கும் அதி கூடிய தொகையை சம்பத் வங்கி வழங்குகின்றது

கெரட் 24ற்கு 30,000/-

கெரட் 22ற்கு 27,000/-

வியாபாரச்சந்தையின் அதிகுறைந்த மாதாந்த 1.17% வட்டிக்கு

சம்பத் ரன்திரிய அடகுச் சேவை

அழையுங்கள்: 0112 30 30 50

සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank



ESPN Lumala

யாழ். நகரில் வியாபாரத்துறையில் 50 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பெற்ற நிறுவனத்தினர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி பெருநிலப்பரப்பு மக்களுக்கு உதவும் முகமாக தற்போது கிளிநொச்சியில்



யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ்,யுனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.

இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ ஆண்,பெண் ஸ்போட்ஸ்,யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுன்டின்,சொப்பர் மிதிவண்டிகளும், பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

**இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்**

52,54, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

ஏ-9 வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சி.

Tel: 021 222 3096 Fax: 021 222 4394

# வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு கோழிக்கூடுகளை வழங்கிய வர்த்தகர்



கடந்த ஞாயிற்றுக் கிழமை மகனின் திருமணம் இடம் பெற்றது. இந்நிகழ்வை யொட்டி கடந்த புதன்கிழமை பத்துக் கோழிக் கூடுகள் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பெண்களை குடும்பத் தலைவிகளாகக் கொண்ட படிக்கும்பிள்ளைகள்உள்ள 10 குடும்பங் களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

(யாழ்ப்பாணம்)

மகனின் திருமணத்தையொட்டி பாதிக்கப்பட்ட மக்களில் பத்துக் குடும்பங்களுக்கு சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான கோழிக்கூடுகளை வழங்கி, வர்த்தகர்களில் முன்னோடி நடவடிக்கையொன்றை சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த வர்த்தகரான எஸ். மகாதேவன் மேற்கொண்டுள்ளார்.

கோழிக்கூடுகள் உடுவில் பிரதேச அலுவலர்கள் முன்னிலையில் வைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். இந்த பணியை ஏனைய பணம் படைத்தவர்களும் மேற் கொள்வதன் மூலம் யாழ்ப்பாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பல இளம் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக் கான வசதிகளை ஏற்படுத்த முடியும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றார்கள். (ஸ்ரீ)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் புல்லாங்குழல் கச்சேரி

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் **புல்லாங்குழல் கச்சேரி** இடம்பெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் புல்லாங்குழல் ஆசிரியர் எ.புவனேந்திரராஜாவின் நெறியாள் கையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் எ.புவனேந்திரராஜா (புல்லாங் குழல்), திருமதி மங்கைலக்ஷ்மி வர்ணகுலசிங்கம் (வயலின்), கலாவித்தகர் கிருபா அனந்தகோபன் (மிருதங்கம்), செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சன் (கடம்) ஆகியோர் நிகழ்வினை வழங்குவார்கள்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை அமெரிக்கமிசன் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி பி.தேவமித்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ)

# பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் 44 வீதிகள் புனரமைப்பு

(வேலணை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட நாற்பத்தி நாலு உள்ளூர் மற்றும் சிறு வீதிகள் திருத்த வேலைகள் நடைபெறுகின்றது.

அதாவது வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் சுமார் 125 இலட்சம் ரூபா செலவில் மாகாண விசேட நன்கொடை நிதித்திட்டத்திலிருந்து 10 இலட்சம் ரூபாவுமாக சேர்த்து சுமார் 135 இலட்சம் ரூபாவிற்கு இவ்வீதிகள் புனரமைப்பு செய்யப்படுவதாக தெரியவருகிறது. (ஸ்ரீ-2-22)

# கணனி பயிற்சி நெறி

பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினாலும், கரித்தாஸ் - கியூடெக் வளங் களுடனும் பருத்தித்துறை, பொலிகண்டியில் நடாத்தப்படவிருக்கும் கணணி பயிற்சி நெறிக்குப் பதிவு செய்த மாணவர்களுக்கான கணணிப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருப்பதால், பதிவு செய்த மாணவர்கள் அனை வரையும் தவறாது பங்கு பற்றி தங்களுக்குரிய நேர அட்டவணைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பருத் தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

12.09.2010
ஆவணி 27, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தி முற்பகல் 8.06 மணி வரை
சுவாதி முன்னிரவு 8.41 மணி வரை
இராகுகாலம் 4.33-6.03 மணி வரை
சுபநேரம் 9.03-10.33 மணி வரை
நான்காம் ஆவணி ஞாயிறு.
ரிசி பஞ்சமி

**மேடம்** வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும் நாள், வாழ்க்கைத் துணை வழியேமகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்துசேரும், குடும்பத்துடன் குதூகலப் பயண மொன்றை மேற்கொள்வீர்கள்.

**இடபம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சியைத் தரும், உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், பிள்ளைகளுக்காக சில செலவுகளைச் செய்ய நேரிடும், மாமன் , மைத்துனர் வழியில் இனிய செய்தி வந்து சேரலாம்.

**கடகம்** பெற்றோரின் பாச மழையில் நனையும் நாள், சுப பேச்சுக்கள் நடைபெறலாம், மனதில் புதிய சிந்தனை தோன்றும், பெரியோரின் உதவியை நாடுவீர்கள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், அந்தஸ்து உயரும், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உறவினர், நண்பர்கள் வலிய வந்து உதவுவர்.

**கன்னி** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரும், திறமையானவர்களின் ஒத்துழைப்போடு வளர்ச்சி காண்பீர்கள், குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் தோன்றுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், கொள்கைப் பிடிப்பை உறவினர்களுக்காக கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடலாம்.

**விருச்சிகம்** பணவரவு திருப்தி தரும், பயணங்களால் பலன் கிடைக்கும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும், திருமணத்தடை அகலும், சுப செலவுகள் நடைபெறலாம்.

**தனுசு** கையில் காசுப் புழக்கம் அதிகரிக்கும் அந்நிய தேச பயண வாய்ப்புகள் எண்ணியபடியே கைகூடலாம், விலை உயர்ந்த பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும், நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியுண்டு, எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம்.

**கும்பம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், தொலைபேசித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.

**மீனம்** சூரிய வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், வாகனத்தில் செல்வதில் கவனம் தேவை உறவினர்கள் குறைபேசும் வாய்ப்புண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## சந்தேக நிவர்த்தி

"சேர், குரங்கைப் பற்றியும் - மனிதனைப் பற்றியும் உங்களிடம் சில சந்தேகங்கள் கேட்க வேண்டும்."

"கேளுங்களேன்"

"முதலாவது சந்தேகம் - குரங்கிலிருந்துதான் மனிதன் வந்தானா?"

"அப்படித்தான் வந்திருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு"

"சரி, இப்பொழுது இரண்டாவது சந்தேகம் - குரங்கு மனிதன் இருந்ததற்கான ஆதாரம் ஏதாவதுண்டா?"

"சமீபத்தில் எதியோப்பியா நாட்டில் ஆதிகாலத்து குரங்கு மனிதனின் உடலை விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்."

"சரி, இப்பொழுது மூன்றாவது சந்தேகம் - இந்தக் குரங்கு மனிதன் எவ்வளவு காலத்துக்கு முந்தைய ஆசாமி?"

"இந்த ஆள் 40 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் பூமியில் வாழ்ந்ததாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்."

"சரி, இப்பொழுது நான்காவது சந்தேகம் குரங்கிலிருந்து மனிதனாக மாறியது எப்போது?"

"குரங்கு இனம் காட்டை விட்டுப் புல்வெளிகளில் அலைந்து திரிந்த போதுதான் அந்த இனத்திலிருந்து மனிதன் தோன்றினான் என்று இதுவரைக்கும் நம்பப்பட்டுவந்தது. இப்பொழுது முதற் தடவையாக காட்டின் நடுவில் ஓர் ஆதிமனிதனின் உடல் கிடைத்திருக்கிறது என்ற செய்தி விஞ்ஞானிகளையே திகைக்க வைத்திருக்கிறதாம். இப்பொழுது கிடைத்திருக்கும் மனித உடல் இதுவரைக்கும் கண்டுபிடிக்கப்பட்ட எல்லாவற்றையும் விட மிகவும் பழைமையானதாம்."

"சேர், கடைசியாக ஒரு சந்தேகம்?"

"என்ன?"

"மனிதக் குரங்குக்கு வால் உண்டா?"

"கொஞ்சம் திரும்பி நில்லுங்கள்.
பார்த்துவிட்டுச் சொல்கிறேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 70 |
| தக்காளி | 120 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 60 | 80 | 60 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 40 | 30 | 20 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 65-70 | 60 | 55 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 40 |
| பயற்றங்காய் | 100 | 120 | 50 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 30 | 30 |
| கறிமிளகாய் | 70 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 100 |
| போஞ்சி | 120 | - | 110 |
| கத்தரிதம்புள்ள | 70 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 30-35 | 30 |

# மரண அறிவித்தல்கள்

## சிவமணிதேவி இராசலிங்கம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிளி அக்கா வன்ஜா என அன்பாக அழைக்கப்படும் திருமதி. சிவமணிதேவி இராசலிங்கம் 08.09.2010 புதன்கிழமை இறையடி எய்தினார். அன்னார் பரஸ்கோலுப் பிரிகேசன் சேவிஸ் உரிமையாளர் இராசலிங்கத்தின் அன்பு மனைவி யும்,காலஞ்சென்றவர்களான மதியாபரணம் செல்லம்மா தம்பதியினரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோமளாதேவி மற்றும் நேத்திரலிங்கம் (அவுஸ்திரேலியா), தேவகி உதயலிங்கம், வாசுகி(கனடா), விஜயலிங்கம் (UK), நவநீதலிங்கம் (UK), யோகலிங்கம் (நோர்வே), புஸ்பலிங்கம், வைதேகி, அருந்தவலிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.09.2010 திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

பரஸ்கோ,
681, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P - 0217901136

தகவல்
குடும்பத்தினர்.

(C-1053)

## யதகுலசிங்கம் வைகுந்தன் (குந்தன்)

**(முகாமையாளர், கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட யதகுலசிங்கம் வைகுந்தன் வியாழக்கிழமை (09.09.2010) அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யதகுலசிங்கம் மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் பராசக்தி அவர்களின் அன்பு மருமகனும் சுதர்சினி (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், அபிஷாயினியின் ஆருயிர் தகப்பனாரும், அருட்செல்வி (மஞ்சு),மேகலா (நோர்வே), அரவிந்தன் (அமெரிக்கா),சிவதீபன், சியாமினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற நீதிராசா மற்றும் அருள்முருகன் (நோர்வே),குகதர்சினி, லோபனா, கலையரசி, சாந்தினி, சத்தியதாசன், சத்தியபாலன் ஆகியோரின் அருமை மைத்துனரும் விக்னேஸ்வரநாதன், பரஞ்சோதி ஆகியோரின் சகலனும் கோபிகன், நிஷாந்தி, பிரசன்னா, கஜேந்திரன், ஜீவிதா, சயந்தன்,நிவேதா, நிலாஷன், நிதுஷா ஆகியோரின் அருமை மாமனாரும், யதுவின் பெரிய தந்தையும், அக்ஷயா, கிஷானா, சாரங்கன், யதுஷா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வராகி அம்மன் கோவிலடி,
நாவலடி ஒழுங்கை,கொக்குவில் மேற்கு ,
கொக்குவில்.
0776589049

தகவல்:
குடும்பத்தினர்

(2447)

# ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தீர்வே முக்கியம்

## டி.ராஜா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டியதே முக்கியம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செய்தியாளர் டி.ராஜா,

தமிழக மீனர்வர்களின் நலனுக்காக இலங்கையயுடனான கச்சதீவு ஒப்பந்தத்தை மதிய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். இலங்கை சென்ற மத்திய வெளியுறவுத் துறை செயலாளர் நிருபமாராவ், தமழிர்களின் மறுவாழ்வு பணிகளை மட்டுமே வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் இலங்கை தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு கிடைக்கவேண்டியதே முக்கியம் என்றார். மேலும் காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு ஏற்பட மாநில அரசும், மத்திய அரசும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ)

# 70 வயதைத் தாண்டிய கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது

இலங்கைச் சிறைச்சாலைகளிலுள்ள 70 வயதைக் கடந்த கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த சிறைச்சாலைகளில் தண் டனை அனுபவித்து வரும் 70 வயதைத் தாண்டிய கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளார்.

இன்று கைதிகள் நலன்புரி தினம் அனுஷ் டிக்கப்படவுள்ள தாகவும் இதனை முன்னிட்டு கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தவிர்ந்த ஏனைய 70 வயதைக் கடந்த கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப் படவுள்ளது. (ஸ்ரீ-2)


# VACANCY ANNOUCEMENT

In response to the official request of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, a Japan International Cooperation Agency (JICA) team is going to implement "the Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District", or PDP Jaffna in short. To carry out the tasks of the project, the JICA team now invites applicants for local consultant positions specified below.

**POST TITLE** : Agriculture Development Specialist (1 person)
Fishery Development Specialist (1 person)

**General Qualifications:**
Applicants for the positions above must have at least the following qualifications.
(a) Proven ability to undertake research, analytical and evaluation work on well-defined tasks, collect and organize required data and information, and apply appropriate computer skills.
(b) Excellent command of English in speaking and writing – capable to produce well-organized reports.
(c) Excellent command of Tamil language at least in speaking. Originating from or resident in Jaffna District is an advantage.
(d) Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned university. A master's or more advanced degree is an advantage.
(e) Work experience with international donor organizations, bilateral development agencies, and projects supported by these organizations/agencies is an advantage.

**Qualification of Agriculture Local Consultant:**
(1) Minimum of eight (8) years working experience in the area of agricultural development.
(2) Good knowledge of crop production, livestock production, agro-processing, agro-products distribution and markets, farm household management and agricultural cooperatives.
(3) Experience of conducting survey relating to agricultural development.
(4) Minimum three (3) years working experience in Jaffna district.

**Qualification of Fishery Local Consultant:**
(1) Minimum of eight (8) years working experience in the area of fishery development.
(2) Good knowledge of capture fishery, fish farming, fish processing and fishery household management.
(3) Experience of conducting survey relating to fishery development.
(4) Minimum three (3) years working experience in Jaffna district.

**How to Apply:**
To apply, ①please send your CV to the following email address by e-mail , or ②please post the following address by post.

Closing Date: 24th September 2010

SPEED MANAGEMENT SERVICE (PVT.) LTD.
No 36/2, Rasavin Thoddam, Jaffna
speedms2010@gmail.com

(2449)


# விலைப்பட்டியல் இல்லையேல் வர்த்தக நிலையங்கள் மீளப்பெறப்படும்

## வர்த்தக அமைச்சர் அறிவிப்பு

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமல் காணப்படும் அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்படுமென நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொருளாதார மத்திய நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப் படாமை குறித்து அமைச்சருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்துமாறு பல தடவைகள் வர்த்தகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் விலைப்பட்டியில் காட்சிப்படுத்தப்பட வேண்டியது நேற்று முன்தினம் தொடக்கம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# விண்வெளி வீரர்களை துயில் எழுப்பப் பாடல்!



விண்வெளிவீரர்கள் விண்வெளியில் இருக்கும் போது அவர்களைத் துயில் எழுப்பு வதற்கான பாடல் தேர்வுப் போட்டியை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா" அறிவித்துள்ளது.

முதல்முறையாக இந்தப் பாடல் தேர்வுப் போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில், அதிகமானவர்களின் மனதை ஈர்க்கும் ஒரு நல்ல 'ட்யூன்' தேர்வு செய்யப்படும். இந்த ஆண்டு இறுதியில் 'டிஸ்கவரி' விண்கலத்தில் செல்லும் வீரர்களுக்கு இந்தப் பாடல் ஒலிக்க விடப்படும்.

அதேபோல, அடுத்த ஆண்டு "எண்டவர்" விண்கலத்தில் விண்வெளிக்குச் செல்லும் வீரர்களுக்காகவும் புதிய அசல் "ட்யூன்களை" உருவாக்கும்படி வளரும் இளம் இசையமைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கின்றனர். இந்தப் போட்டிகள் நாடு தழுவிய அளவில் அறிவிக்கப் பட்டுள்ளன.

பொதுவாக, விண்வெளி வீரர்களை எழுப்புவதற்கான பாடல்களை விண்வெளிக் குழுவினரின் நண்பர்களும், உறவினர்களும் தேர்வு செய்வது வழக்கம். ஆனால் தற்போதைய 'துயில் எழுப்பும் பாடல்' தேர்வுப்போட்டி மூலம், சாதாரண மக்களுக்கும் முதல்முறையாக அந்தக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முந்தைய 40 துயில் எழுப்பும் பாடல்களில் இருந்தும் சிறந்த ஒன்றைத் தேர்வு செய்யலாம்.

அந்த 'சாய்ஸ்' களில் பிராங்க் சினாட்ராவின் ' பிளை மீ டு தி மூன்', டாம் பெட்டியின் ' பிரீ பாலின்', யூ 3, எல்டன் ஜானின் பிரசித்தி பெற்ற பாடல்கள் உள்ளிட்டவை அடங்கும். போட்டி அறிவிக்கப்பட்டதுமே " பை ரஷ்' பாடல் முன்னணி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து ' ஸ்டார் டிரெக்' கருத்துப் பாடலும், யூ2வின் ' பியூட்டிபுல் டே' போன்றவை வருகின்றன.


அதிகமானவர்கள் தேர்ந்தெடுக்கும் இரண்டு பாடல்கள், நவம்பர் மாதம் ' டிஸ்கவரி' விண்கலம் தனது கடைசிப் பயணத்தை மேற்கொள்ளும் போது, அதன் விண்வெளி வீரர் குழுவுக்கு ஒலிக்க விடப்படும்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 26இல் எண்டவர் விண்கலம் விண்ணுக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறது. அதன் வீரர்களுக்கு, முற்றிலும் புதிதாக உருவாக்கப்படும் பாடல் இசைக்கப்படும். " எந்தப் பாடல் எங்களுக்காக ஒலிபரப்பப்பட வேண்டும் என்று மக்கள் தேர்வு செய்கிறார்கள் என அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம்" என்று டிஸ்கவரி பயண கெமாண்டர் ஸ்டீவ் லிண்ட்சே தெரிவித்திருக்கிறார்.

'எண்டவர்' கெமாண்டரான மார்க் கெல்லி கூறுகையில், "விண்வெளிப் பயணக்குழுவினர், அதிகாலை துயிலெழுப்பும் பாடலை மிகவும் இரசிப்பார்கள். விண்கலத்தில் எங்களுக்கு மிகச் சிறந்த 'ஸ்பீக்கர்' எல்லாம் கிடையாது. இந்நிலையில், பொது மக்கள் எந்தப் பாடலைத் தேர்வு செய்யப் போகிறார்கள் என்று அறிய ஆவலாக இருக்கிறது" என்றார்.

பாடல் தேர்வுப் போட்டி தவிர, 'பேஸ் இன் ஸ்பேஸ்' என்ற போட்டியையும் ' நாசா' அறிவித்திருக்கிறது. அதன்படி, 'நாசா'வின் இணையதளத்துக்கு எவர் வேண்டுமானாலும் தங்களின் முகத்தை மட்டும் படமெடுத்து அனுப்பலாம். அது விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்படும்.

# மிகப் பெரிய தொலைநோக்கி!



உலகிலேயே மிகப் பெரிய, திறன் மிக்க தொலைநோக்கி, அமெரிக்காவின் கலிபோர்னியா பாலோமார் மலை மீது அமைந்துள்ளது.

200 அங்குலக் குறுக்களவும், 19 தொன் எடையும் உள்ள பிரமாண்டமான குழிவாடியைக் கொண்ட இந்தத் தொலைநோக்கியை நிறுவ 20 ஆண்டுகள் பிடித்தன.

9 இலட்சம் மடங்கு உருவத்தைப் பெருக்கிக் காட்டும் இந்தத் தொலைநோக்கி, விண்மீன்கள் குறித்த பல தகவல்களைத் துல்லியமாக அளிக்கிறது.

விண்மீன்களின் பருமன், எடை, செறிவு, வேகம் போன்றவற்றை பாலோமார் தொலைநோக்கி மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

# உணவில்லாமல் 11ஆயிரம் கி.மீ.தூரம் பறக்கும் பறவை!



ஓய்வே எடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்து 11 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பறப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். தலை கிறுகிறுத்துவிடும். ஆனால், அந்தச் 'சாதனையை'ப் புரிகிறது, 'காட்விட்' என்ற பறவை. தொடர்ந்து 8 மணிநேரம் பறக்கும் இப்பறவை, ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை தனது உடல் எடையில் 0.41 சதவீத அளவு உணவைக் கிரகித்துக் கொண்டு புயல் வேகத்தில் பயணத்தை மேற்கொள்கிறது.

ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும் அலாஸ்காவில் இருந்து நியூசிலாந்துக்கு இந்த எட்டு நாள் பயணத்தை மேற்கொள்கிறது காட்விட்.

இந்தப் பறவையானது இடைவிடாது தொடர்ந்து பறக்கிறது. ஓய்வெடுப்பதற்கோ, உணவு உட்கொள்வதற்கோ ஒரு முறை கூட பயணத்தை முறிப்பதில்லை. வசந்த காலம் வந்ததும் மறுபடி நியூசிலாந்தில் இருந்து அலாஸ்காவுக்கு 11 ஆயிரம் கிலோ மீற்றர் பயணத்தை மேற்கொள்கிறது.

ஸ்வீடனின் லண்ட் பல்கலைக்கழக சுற்றுச்சூழலியல் பேராசிரியர் ஆண்டர்ஸ் ஹெடன்ஸ்ட்ராம், எப்படி இந்தப் பறவை இனத்தால் இவ்வளவு தூரம் இடைவிடாமல் பறக்க முடிகிறது என்று வியந்தார், அது குறித்து ஆராய்ந்தார்.

தொடர்ச்சியாக நீண்ட தூரத்துக்குப் பறப்பதில், மனிதனால் உருவாக்கப்பட்ட விமானங்களை விட மிகச் சிறந்தது இந்தப் பறவை என்கிறார் ஆண்டர்ஸ்.

தொடர்ந்து நீண்ட தூரம் பறந்த விமானத்துக்கான சாதனைக்குரியது 'கின்டிக் ஸெபர்'. அது ஓர் ஆளில்லாத சூரிய சக்தி விமானம். அது தொடர்ந்து 82 மணி நேரம் காற்றில் பறக்கும். அதாவது தொடர்ந்து மூன்றரை நாட்களுக்குப் பறந்து கொண்டே இருக்கும்.

ஆனால் காட்விட் பறப்பதோ தொடர்ச்சியாக எட்டு நாளைக்கு. ஆனால் இந்தப் பறவையை இடைநிற்காமல் தொடர்ந்து 11 ஆயிரம் கிலோ மீற்றர் பறக்க வைப்பது எது? எப்படி 8 முழு நாட்களும் இவை உறக்கம், உணவின்றிச் சமாளிக்கின்றன?


அதற்கான ஒரு விளக்கம், மற்ற பறவைகளுடன் ஒப்பிடும் போது இவை பறப்பதற்குக் குறைவான சக்தியையே பயன்படுத்துகின்றன என்பது. இப்பறவைகள் தாம் பறக்கும் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு முறை தனது உடல் எடையில் 0.41 சதவீத அளவை உணவாகக் கிரகித்துக்கொள்கின்றன என்றார் ஆண்டர்ஸ்.

"மற்ற பறவைகளுடன் ஒப்பிடும் போது இது மிக மிகக் குறைவான அளவு" என்று விளக்குகிறார் ஆண்டர்ஸ். இது தவிர வேறு சில காரணங்களும் இருக்கின்றன. முழுப் பயணத்துக்கும் சக்தியை எடுத்துச் செல்லும் வகையில் பறவையின் உடல் எடையும் அளவும் சரியான விகிதத்தில் இருப்பது முக்கியமான ஒன்று.

'காட்விட்' பறவைக்குச் சக்தியை அளிப்பது கொழுப்பும், புரதமும் தான். காற்றின் எதிர்ப்பைக் குறைக்கும் 'ஏரோடைனமிக்' உடல் அமைப்பும் உதவுகிறது என்று தெரியவந்திருக்கிறது.




# விண்வெளியில் எப்படி நடக்கிறார்கள்?




அன்றாட வாழ்வில் தரையில் நடக்கும் போதே நாம் சிலவேளைகளில் தடுமாறு கிறோம். அப்படியிருக்கும் போது விண்வெளியில் எப்படி விண்வெளி வீரர்கள் நடக்கிறார்கள்?

சாதாரணமாக நாம் நடப்பதற்கு மூளை மிகவும் உதவுகிறது. நமது தசைகள், [illegible]துகள், கண்கள் ஆகியவை நம்மை [illegible]ற்றி நடக்கும் தகவல்களைச் [illegible] உடனுக்குடன் மூளைக்கு அனுப்புகின்றன. மூளை அதற்கேற்ப உடலின் பல பகுதிகளுக்கும் கட்டளைகளை அனுப்பி நாம் சமநிலையில் நடப்பதற்கு உதவுகிறது.

ஆனால் விண்வெளியில் நடப்பது என்பது சாதாரண விடயமல்ல. அதற்கென பல கடுமையான பயிற்சிகளை விண்வெளி வீரர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். முதலில், சுழலும் நாற்காலி ஒன்றில் அவர்களை அமர வைத்து 10 நிமிடம் சுழலவிட்டுப் பின்னர் அதிலிருந்து இறக்கிவிட்டு மேடையில் மெதுவாக நிற்கச் சொல்கிறார்கள். அவ்வாறு செய்யும் போது உடனடியாக நிற்க முடியாது தான். ஆனால் தொடர்ந்து பயிற்சி மேற்கொள்ளும் போது மூளை அதற்கேற்ப கட்டளைகளை இடுகிறது. இது போன்ற பயிற்சிகளைப் பெற்ற பின் விண்வெளி வீரர்களுக்கு விண்வெளியில் நடப்பது சுலபமாகிறது.


ஆனால் விண்வெளி வீரர்கள் விண்வெளிக்குச் சென்று அங்கே நடந்துவிட்டு பூமிக்குத் திரும்பும் போது இங்கே நடக்கச் சிரமப்படுவார்கள். தலை வலி, உடல்நலம் பாதிக்கப்படுதல், தள்ளாட்டம் போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாவார்கள். சில நாட்கள் கழித்து தான் அவர்களால் இயல்பு நிலைக்கு வர முடியும்.


# கடலின் ஆழம்



கடலின் ஆழத்தை அறிய மனிதன் நீண்ட காலமாக முயன்று வந்திருக்கிறான். தெரிந்த விபரத்தின் படி, முதன் முதலில் மிக அதிகமான ஆழத்துக்குச் சென்று கடலின் தரையைத் தொட்டுத் திரும்பியவர்கள் ஜாக்யூஸ் பிக்கார்டு, டொனால்டு வால்ஷ் என்ற இருவர்.

அவர்கள் டிரையஸ்டே என்ற படகில் ஏறி, 'பாத்ஸ் கேப்' என்ற நீர்மூழ்கிக் கோளத்தின் மூலம் 'மரியானாஸ் டிரெஞ்ச்' என்ற 10 கி.மீ. ஆழமுள்ள கடலில் மூழ்கித் தரையை தொட்டு வந்தனர். அவர்கள் அந்தச் சாதயையைப் புரிந்தது 1960 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி. அந்த ஆழத்தில் 2.4 டிகிரி செண்டிகிரேட் வெப்பம் மட்டுமே இருந்தது.





கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையில் சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதான சிறைச்சாலை காவலர் இந்திரகுமாரன் உரையாற்றுவதையும் அருகில் பூசகர் நவரத்தினம் உமாதீஸ்வர சர்மா , ஈஸ்வர சர்மா, முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர் மகேன்குணசேகர ,திருமதி உஜிதாகுணசேகர ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர் கைதியொருவருக்கு அன்பளிப்பு வழங்குவதையும் பூசகர் உமாதீஸ்வர சர்மா கைதியொருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரன்)

## பொதுநலவாய நாடுகளின் தகவல் தொழில்நுட்ப மாநாடு நாளை கொழும்பில்

பொதுநலவாய நாடுகளின் தகவல் தொழில்நுட்ப சங்க வருடாந்த மாநாடு நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்த மாநாடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பொதுநலவாய நாடுகளில் தகவல் தொழில் நுட்ப சங்கத் தலைவர்கள் தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பின் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தகவல்தொழில்நுட்பநிறைவேற்று மாநாட்டின் தலைமைத்துவம். இந்த முறை இலங்கைக்கு கிடைக்குமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7)

## ஐ.நா.உச்சிமாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்



ஐக்கிய நாடுகள் சபையின் உச்சி மாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளதுடன் மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் இம்முறை மாநாட்டில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் 65 ஆவது பொதுச்சபை அமர்வுகள் நாளை மறுதினம் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.தலைமையகத்தில் ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து 20 ஆம் திகதி சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு ஆரம்பமாகவுள்ளது. அமைச்சர்களின் பொது விவாதங்களுக்கான அமர்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும். இம்முறை உச்சி மாநாட்டில் மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் காலநிலை மாற்றம் , உணவுப் பாதுகாப்பு , பாதிக்கப்பட்ட நாடுகளின் மீளமைப்பு மற்றும் வலுப்படுத்தல் , பாதுகாப்பு சபை மறுசீராக்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

Purview of JOBSNET
Ministry of Labour Relations and Productivity Promotion

20 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Sep 2010 to Feb 2011

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம் மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2010

## அரிசி உணவு உட்கொள்வதை ஊக்குவிப்பதற்கான முயற்சி

பாண் விலையை உயர்த்துவதற்கான நடவடிக்கையானது மக்களை அரிசி உணவுகளை உட்கொள்ளச் செய்வதன் மூலம் உள்ளூர் நெல் உற்பத்தித் துறைக்கு உதவுவதற்கான முயற்சி என வர்த்தக சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மக்களை அதிகமாக அரிசி உணவுகளையும் பாணை குறைவாக உண்ணுமாறும் அரசாங்கம் வலியுறுத்துவது இந்தத் திட்டத்திற்கு உதவும் நடவடிக்கை என தேசிய வர்த்தக தொழிற்சங்க மத்திய நிலையம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கோதுமைமாவின் விலை உயர்வினால் தான் பாண் விலை அதிகரிக்கப்பட்டதாக கூறப்படுவது உண்மையானால் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் விரைவில் அதிகரிக்கலாம் என தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன

(கொழும்பு)

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் - இலங்கை பொருளாதாரக் கூட்டுறவு தொடர்பான மாநாடு எதிர்வரும் வாரத்தில் இலங்கையில் நடைபெறவுள்ளதாகவும் இந்த மாநாட்டின் போது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் வகையிலான மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை- ஈரானுக்கு அதிகளவு தேயிலை ஏற்றுமதி செய்யும் அதேவேளை ஈரானிடமிருந்து அதிகளவு மசகு எண்ணெயை இறக்குமதி செய்கின்றது.

கடந்த சில வருடங்களில் இலங்கை 30 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை

### பியசேன எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.பியசேன தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் பியசேனவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்தவிடயம் தொடர்பில் இது வரையில் தமக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்பு கிடைக்கவில்லையெனவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமாயின் அது தொடர்பான எழுத்து மூல அறிவிப்பு விடுக்கப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி கொள்கைகளுக்கு முரணான வகையில் செயற்பட்ட காரணத்தினால் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் பியசேனவிற்கு எதிரான ஒழக்காற்று விசாரணைகள் நடத்தப்படும் எனவும் ஒழுக்காற்று குழுவினர் கூடி இறுதித்தீர்மானம் எடுப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்ல விருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

இதோ உங்களுக்கான 3மாத பயன்மிகு பயிற்சிகள்

கிழமைநாள் பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2010

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- கூந்தல் அலங்காரம்
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- கைவேலை
- பூவேலை

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான மோத உடை தயாரித்தல் பயிற்சிகள்
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்குறிப்பிட்ட தையல் பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளன.

ஆரம்பம்: 19-09-2010 (ஞாயிறு)

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25வது ஆண்டில்
கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

# வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களினால் அதிகளவு பணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

## மத்திய வங்கியின் ஆய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களினால் அதிகளவு பணம் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களினால் இந்த ஆண்டில் இதுவரையில் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் மற்றும் வடக்கு ,கிழக்கில் வாழும் மக்களின் உறவினர்கள் ஆகியோரினால் அதிகளவு பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யுத்தம் நிறைவடைந்துள்ள காரணத்தினால் புலம்பெயர் மக்கள் தமது சொந்தங்களுக்கு கூடுதலாக பணம் அனுப்பி வைப்பதாக மத்திய வங்கியின் ஆய்வுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# அமைச்சர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு இரகசிய குழு

## ஜனாதிபதி நியமனம்

(கொழும்பு)

அமைச்சர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரகசிய குழு ஒன்றை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களின் செயற்றிறன் தொடர்பில் இந்த இரகசிய குழு மதிப்பீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் அமைச்சுக்களில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி நிலைமைகள் குறித்து இரகசியமாக கண்காணிக்கப்படவுள்ளது.

குறித்த இரகசிய குழுவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் இந்த மாற்றங்களின் போது இரகசிய குழுவின் அறிக்கை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை அண்மையில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆறு ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் எட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஊவா , வடமேற்கு ,வடமத்திய மற்றும் தென்மாகாணங்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவில் இ.தொ.கா. நாளை சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் இடம் பெற்று வரும் தேசிய நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாளை திங்கட்கிழமை சாட்சியமளிக்கும் என காங்கிரஸின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இ.தொ. கா. பொதுச் செயலாளரும் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டைமான் தலைமையில், தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம், சிரேஷ்ட உபதலைவர் ஹரிசந்திர சேகர, சட்டத்தரணியும், நிர்வாக உபதலைவருமான கா.மாரிமுத்து மற்றும் உப தலைவர் துரை மதியுகராஜா ஆகியோரும் இதில் பங்கேற்கவுள்ளனர் என்றும் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை

## இலங்கை கடற்படை மறுப்பு

கச்சதீவில் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கச்சதீவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என கடற்படை பேச்சாளார் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவு பிரதேசத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் ஒருவர் கடுமையான காயங்களுக்கு ஆளாகியிருப்பதாகவும் இந்திய செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்திய மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்தியதாகவும் பிடிக்கப்பட்ட இறால்களை அபகரித்துச் சென்றுள்ளதாகவும் மேலும் இலங்கைக் கடற்படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அரசியல் சாசனத்திற்கு எதிராக சுவரொட்டிகளை அச்சிட்ட நபர் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

18ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராக சுவரொட்டிகளை அச்சிட்டு வெளியிட்ட நபர் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அரசியல் சாசனத்திற்கு எதிராக சுவரொட்டிகளை அச்சிட்டு பிரசுரம் செய்த நபரை பொலிஸார் தடுத்து வைத்திருப்பதாகத் தெரிவித்து அவரது சட்டத்தரணி இந்த மனுவை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜயம்பத்தி புலத்சிங்கள என்ற நபரின் சார்பில் சட்டத்தரணி லிலாந்தி டி சில்வா குறித்த மனுவை உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிரிஹான பொலிஸ் நிலையத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, குறித்த சுவரொட்டிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அச்சகத்தின் உரிமையாளர் அவரது மனைவி மற்றும் மனைவியின் சகோதரர்கள் ஆகியோரை பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அச்சக உரிமையாளரின் மனைவி மற்றும் சகோதரர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் குறித்த அச்சக உரிமையாளர் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை.

மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவதற்காக உரிமை மறுக்கப்பட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு தெரிவிக்கும் நபர்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் இது ஓர் ஜனநாயக விரோத செயல் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமக்கு விரும்பிய அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளதாக மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கும்பாபிஷேகம்

குருசாமி வீரமணி தாசன் ஸ்ரீஹரியின் அருளாசியோடு அகில இலங்கை யாழ். கோண்டாவில் அருள்மிகு சபரீச ஐயப்பன் தேவஸ்தான 108 கலச சங்காபிஷேகமும் கும்பாபிஷேகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும். இன்று மாலை சுவாமி வீதியுலா வலம் வருதலும் விசேட படிப்பூசையும் இடம் பெறவுள்ளதாக ஆலய அறங்காவலரும் குருசாமியுமான பிரம்மஸ்ரீ ஹரி ஹரசுத சிவாச்சாரியார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05 * 09 * 1973

மறைவு 09 * 09 * 2010


அன்புடன் எல்லோரையும் காத்தீர்
ஆல்போல் வாழவைத்து இல்லறம் இனிது கண்டீர்
ஈகைகள் பல செய்தீர் உத்தம குணம் கொண்டீர்
எல்லோரையும் தவிக்கவிட்டு ஏன் இந்தப் பிரிவு தந்தீர்
அன்புடனும் பாசத்துடனும் எம்முடன்
கூடிக்குலாவி மகிழ்ந்து இன்று தெய்வமாகி விட்ட
அமரர் யதகுலசிங்கம் வைகுந்தவாசன்
அவர்களின் திருப்பாதங்களுக்கு இக் கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
யதகுலசிங்கம் வைகுந்தவாசன்
(முகாமையாளர்– கதிரவன் இரும்பகம், டச்சு வீதி, சாவகச்சேரி.)

உரிமையாளரும், ஊழியர்களும்,
யாழ்ப்பாண இரும்பகம்,
ஏசியன் பெயின்ற்ஸ் யாழ் விநியோக நிலையம்,
32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1143)

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தில் கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் சமூக அபிவிருத்தி மன்றத்தின் உப தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் பயனாளி ஒருவருக்கு கண்ணாடி வழங்குவதையும் அருகில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ருக்மணி ஆனந்தவேல் நிற்பதையும் படத்தில் காணலாம்.

S.S.R.PRINTERS, 72, PALALY ROAD, THIRUNELVELY. T.P: 0217912885, 0777165589.



கல்பிட்டி தீவுகளில் பிரமாண்டமாக மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றுலா தலங்களை அமைக்கும் நடவடிக்கையின் ஓர் கட்டமாக ,கற்பிட்டியவில் 2 தீவுகளை கியூப் லங்கா லிசர் பிரைவட் லிமிட்ட் பெற்றுள்ளது. இங்கு 2ஆயிரத்து 900 மில்லியன் ரூபாய் செலவில் சொகுசு விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் இலங்கை சுற்றுலா சபையுடன் மேற்படி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்த ஆவணத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கியூப் லங்கா லிசர் பணிப்பாளரிடம் கையளிப்பதைக் காணலாம்.

## வர்த்தக உலகம்

**ஆர்.எஸ்.கே.முருகதாஸ்**

# ஏ-9 வீதியூடாக புரோட்பான்ட்டை ஏற்படுத்தும் சிறிலங்கா ரெலிகொம்

சிறிலங்கா ரெலிகொம் தனது ஒளியியல் இழைத்தட முறைமையை (Optical fibre cable system) யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நாட்டின் தென்பகுதிக்கு ஏ-9 பிரதான பாதையூடாக இணைப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சியில் தற்போது நடந்து கொண்டிருக்கும் பணிகளின் வளர்ச்சியை எஸ்.எல்.ரியின் பிரதான நிறைவேற்று அதிகாரியான கிரெய்க் யங் மேற்பார்வை செய்து ஒளியியல் இழைத்தட சிறப்புஉயர்வழியின் இயக்கத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

போர் முடிந்த பின் தொடர்பாடல் சேவைகளுக்கான வளர்ந்து வரும் கேள்விகளை நிறைவேற்றும் முகமாக தனது வலையமைப்பு விஸ்தரிப்பு பணிகளை எஸ்.எல்.ரி.மேற்கொள்கிறது. இதன் ஒரு பகுதியாக ஏ-9 பிரதான வீதியூடாக மன்னார் வவுனியா, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தினை இணைக்கும் இந்த ஒளியியல் இழைத்தடச் செயற்றிட்ட வேலையை நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

இச்செயற்றிட்டத்தின் மூலம் மாங்குளம் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் புதிய தொலைபேசிப் பரிவர்த்தனைகள் அமைக்கப்படுவதுடன் அங்குள்ள வாடிக்கையாளர்களின் அடிப்படைத் தொடர்பாடல் வசதிகளும் அகலப்பட்டை (Broadband) பரப்பெல்லையும் செம்மைப்படுத்தப்படும்.

நாடளாவிய வலையமைப்பில் எல்லாப் பகுதிகளையும் இணைக்கும் அதிவேகமுடையதும், மிகவும் நம்பகமானதுமான ஒளியியல் இழைத்தடங்கள்தான் சகல நவீன தொலைத் தொடர்பாடல் வலையமைப்புகளின் பிரதானமான உட்கட்டமைப்பாகவுள்ளது. அதன்படி நாட்டின் வட பகுதியை இணைப்பதற்கான இந்த அடிப்படை உட்கட்டமைப்பை அமைப்பதன் முக்கியத்துவத்தை எஸ்.எல்.ரி. இனங்கண்டு கொண்டுள்ளது.

இதன்படி ஆரம்பக்கட்டப் பணிகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன. முக்கியமாக இழை ஒளியியல் விசைமாற்றச் செயற்றிட்டங்களை (fibre Optics transmission projects) உள்ளடக்கிய இது வவுனியாவிலிருந்து கிளிநொச்சியையும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்தையும் இணைக்கிறது.

அதேவேளை ஏ-9 வீதியில் 177 கி.மீ.நீளமானஒளியியல் இழைத்தட இணைப்பு அமைக்கப்படும் அதே வேளை, யாழ்ப்பாணம், மானிப்பாய், சித்தன்கேணி, சுன்னாகம், கோப்பாய், சாவகச்சேரி மற்றும் நெல்லியடி போன்ற பகுதிகளுக்கு ஒளியியல் இழை இணைப்பு மூலம் புரோட்பான்ட் வலையமைப்பு ஏற்கனவே இணைக்கப்பட்டுவிட்டது.

# ஆஸிரி ஹொஸ்பிட்டல் யாழில் அமைக்கத் திட்டம்

ஆஸிரி ஹொஸ்பிட்டலானது யாழ்ப்பாணம் மற்றும் கண்டியில் தனது புதிய வைத்தியசாலை மற்றும் ஆய்வு மையத்தை அமைக்கவுள்ளதாக ஆஸிரி ஹொஸ்பிட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் அசோக் பத்திராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

முதலில் யாழ்ப்பாணத்தில் ஆஸிரி வைத்தியசாலையின் ஆய்வு கூட மற்றும் ஆலோசனை நிலையத்தை எதிர்வரும் 2 மாதங்களுக்குள் திறக்கவுள்ளோம். இது யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகிலேயே அமையவுள்ளது. இந் நிலையம் 75 மில்லியன் ரூபாய் முதலீட்டில் அமைக்கப்படவுள்ள அதேநேரம், இதனுடைய முன்னேற்றத்தை அவதானித்து ஆஸிரி வைத்தியசாலை அமைக்கும் முடிபு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கண்டியில்,

100 படுக்கையறைகள் கொண்ட வைத்தியசாலை ஒன்று அடுத்த 18 மாதங்களுக்குள் அமைக்கப்படும் எனவும், இதுவே பின்னர் கண்டியில் பெரிய தனியார் வைத்தியசாலையாக அமையும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் ஆஸிரி ஹொஸ்பிட்டல் பி.எல்.சி., ஆஸிரி சர்ஜிக்கல் மற்றும் ஆஸிரி சென்ரல் ஹொஸ்பிட்டல்கள் ஒரே கூரையின்கீழ் கொண்டுவரப்பட்டு ஆஸிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்காக கூட்டிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது ஆஸிரி வைத்தியசாலைகள் 2 கொழும்பிலும், ஒன்று மாத்தறையிலும் செயற்பட்டு வருகின்றன.

# ஜனசக்தியின் வரிக்குப் பிந்திய இலாபம் அதிகரிப்பு

ஜனசக்தி காப்புறுதி நிறுவனமானது 2010-ன் முதல் அரையாண்டில் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.145.4 மில்லியனை ஈட்டியுள்ளது. இத்துறையில் 19 போட்டியாளர்கள் மத்தியில் இது குறிப்பிடத்தக்க சாதனை என அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதுகுறித்து ஜனசக்தி காப்புறுதியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டர் கூறுகையில்,

பல தரப்பட்ட காப்புறுதி சேவைகளை, சிறந்த நன்மைகளுடன் காப்பீட்டாளர்களுக்கு வழங்கும் தந்திரோபாய நடவடிக்கையின் காரணமாக இது சாத்தியமாயிற்று.

2009இன் இதேகாலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், மிகவும் அதிக இலாபமீட்டிய காப்புறுதி நிறுவனமாக காணப்பட்டாலும், நிறுவனம் வரிக்குப் பிந்திய இலாபத்தில் ஒரு சரிவைக் கண்டுள்ளது. அண்மைய வெள்ளப் பெருக்கு உள்ளடங்கலான இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான அதிகரித்த இழப்பீட்டுக் கோரிக்கைகளே இதற்கு காரணமாகும்.

இந்தக் காலப் பகுதியில் எமது பிரபல்யமான ஜனசக்தி புல் ஒப்ஷன் 7% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதி 0.8% வளர்ச்சியைக் கண்ட அதேவேளை, நட்டமடையும் உற்பத்திகளை ஊக்குவிக்காது பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் இலாபமீட்ட மேற்கொள்ளப்பட்ட எமது முயற்சிகளினால் மோட்டார் வாகனம் சாராத வியாபாரம் 0.4% சரிவைப் பதிவு செய்தது.

ஜனசக்தி நிறுவனம் சட்டப்படி தேவையான மூலதனத்தை விட 7.5 மடங்கு அதிகமாக, ரூ.1.49 பில்லியனைக் கொண்டுள்ளது. அரச பிணைகளில் உள்ள ரூ.4.1 பில்லியனுடன், ரூ.11 பில்லியன் சொத்துக்கள் நிறுவனத்திடம் உள்ளன எனத் தெரிவித்தார்.

# பங்குச்சந்தை 6000 புள்ளிகளைக் கடந்தது

கொழும்பு பங்குச்சந்தையானது அதன் வரலாற்றில், அனைத்துப் பங்கு விலைச்சுட்டி மற்றும் மிலங்கா விலைச்சுட்டி என்பன 6 ஆயிரம் புள்ளிகளைக் கடந்து புதிய மைல்கல்லை அடைந்துள்ளது. இந்நிலையில் வரும் மாதங்களிலும் அடுத்த ஆண்டும் பல கம்பனிகள் பட்டியல்படுத்தப்படவுள்ளன. இதனால் முதலீட்டாளர்கள் பரந்துபட்ட அளவில் தமது முதலீடுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வங்கிகளின் மூலதன அதிகரிப்பு

உள்ளக மற்றும் வெளியக அதிர்வுகளுக்கு தாக்குப்பிடிக்கூடிய வகையிலான உறுதியான வங்கிகளின் இருப்பினை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உரிமம் பெற்ற வங்கிகளின் ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை பின்வருமாறு அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

புதிய வங்கிகளாயின் 2010, 2011, 2014ஆம் ஆண்டுகளில் முறையே, உரிமம் பெற்றவர்த்தக வங்கிகள் 3.00, 4.00, 5.00 பில்லியனையும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் முறையே 2.0, 2.5, 3.0 பில்லியன் ரூபாயினைக் கொண்டிருக்க வேண்டும்.

இதேவேளை ஏற்கனவேயுள்ள வங்கிகளாயின், 31.12.2011, 31.12.2013, 31.12.2015 இல் முறையே, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 3.00, 4.00, 5.00 பில்லியனையும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் முறையே 2.0, 2.5, 3.0 பில். ரூபாயினைக் கொண்டிருக்க வேண்டும்.

மூலதன அதிகரிப்பானது பொருளாதாரத்தின் புதிய வளரும் துறைகளுக்கான வங்கிகளின் பங்களிப்பினை விரிவுபடுத்துவதற்கு மேலதிக தாங்கும் திறனை வழங்குவதுடன் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் இழப்புக்களையும் உள்ளீர்த்துக் கொள்கிறது. இத்தேவைப்பாடுகளைப் பேணும் விதத்திலும் மேன்மையான வெளிப்படைத் தன்மையுடன் மேலதிக மூலதனத்தை பெற்றுக் கொள்வதற்கான வங்கிகளின் இயலுமையை மேலும் விரிவுபடுத்துவதற்கான தேவையினைக் கருத்தில் கொண்டும் சந்தை ஒழுங்கு முறையூடாக ஆளுகையினை மேலும் முன்னேற்றுவதற்குமாக நாணயச்சபையானது உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட பட்டியல்படுத்தப்படாத தனியார் வங்கிகளை கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் 31.12.2010 அன்று அல்லது அதற்கு முன்னதாக அவற்றை பட்டியல்படுத்துமாறு கோருவதற்கு தீர்மானித்துள்ளது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5880.49 | 6023.41 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6066.81 | 6278.31 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 17,086.56 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** அலையன்ஸ்( 736.80), றிப்கொம்பர்ஸ் ஹோட்டல்(10.50), திறி ஏ.பாம்ஸ்(46.10), பைரா பாம்ஸ்(167.00), லங்கெம் டெவலொப் (38.70).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ரான்ஸ் ஏசியா(186.20), டுர்டான்ஸ் (107.20), த பினான்ஸ் கம்பனி(48.10), ஹேலீஸ் எக்ஸ்போட்(45.00), களனி ரயர்ஸ்(119.00). **மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.88 | 113.49 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 172.48 | 176.10 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 141.68 | 145.16 |
| சுவிஸ் பிராங் | 109.63 | 113.17 |
| கனேடிய டொலர் | 106.84 | 110.40 |
| அவுஸ்திரேலிய டொலர் | 102.26 | 105.38 |
| சிங்கப்பூர் டொலர் | 82.93 | 84.97 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.43 | |
| ஐக்.அரபு இராச்சிய திராம் | சுட்டி விலை 30.69 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# டி.எப்.சி.சி.வர்தன வங்கியின் இரு புதிய கடன் திட்டங்கள்

டி.எப்.சி.சி.(DFCC) வங்கி புதிய கடன் திட்டங்கள் இரண்டினை அறிமுகப்படுத்தியுள்ளது. வர்தன செந்தெல்ல என்ற பெயரில் வீட்டுக் கடன் மற்றும் வர்தன நெனெச என்ற பெயரில் பட்டதாரிகளுக்கான கடன் திட்டங்களே தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர்களின் உயர்கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் வர்தன நெனெச கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது டன் அதனூடாக இலங்கையிலுள்ள மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நிதியையும் வழங்கும். இலங்கையில் உள்ள இளைய சந்ததியினருக்கு வெளிநாட்டில் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வேண்டிய ஒத்துழைப்புகள் வழங்கப்படும்.

வெளிநாட்டில் பல்கலைக் கழகங்கள் மற்றும் இணைந்த இலங்கையிலுள்ள வெளிநாட்டு பட்டங்களை வழங்கும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இத் திட்டத்தை மிகவும் விஸ்தீரமாக மேற்கொள்ள வர்தன வங்கி திட்டமிட்டுள்ளது.

அண்மையில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டி.எப்.சி.சி. வர்தன வங்கியின் வீட்டுக்கடன் திட்டமானது ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் விசேட தேவைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் தமது வருமான மட்டங்களைப் பொறுத்து தமக்கு பொருத்தமான வகையில் மீண்டும் செலுத்தக்கூடிய விதத்திலும் மற்றும் வட்டி விகிதங்களை தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பமும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




செப்டெம்பர்19-ம் திகதி முதல் 21-ம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெற ஏற்பாடாகியுள்ள **Young Spikes Media** போட்டியில், இலங்கையிலுள்ள விளம்பர நிறுவனங்கள் சார்பில் பேட்ஸ் (Betes) விளம்பர நிறுவன அணிபோட்டியிட தகுதி பெற்றுள்ளது. இந் நிறுவனத்தின் சார்பில் பங்குபற்றவுள்ள ஆர். கோபி கிருஷ்ணா மற்றும் உதாரா ஹெட்டியாராச்சி ஆகியோரைக் காண்கிறீர்கள்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### மழையே

மழையே
எனக்கு
ஒருவார.......
அவகாசம்
கொடு......!
கூரையின்
ஓட்டைகளை
அடைத்துக்
கொள்கின்றேன்

வ்.முகிலன்
நெடுந்தீவு-13

### தேடல்...

சுதந்திரத்தேடலில் தினம் தினம்
சுழன்றடித்த ஜீவன்கள். தம்
சுற்றத்தை இழந்து நின்று
சுடு காட்டைப் பார்த்த வண்ணம்
சூரிய நமஸ்காரம் செய்கின்றார்
சொந்தங்களைத் தேடி நின்று

புதுவையூரான்

### எம் இனமே! எம் சனமே

சாவு குடி கொண்டபெதங்கள் வாழ்வு
சாத்தானின் உறைவிடமோ கூறு
பாவிகள் நாமென்ற கோசம் இந்தப்
பாரினில் ஒலிக்கிறதே கேளாய்

S. நதி
நல்லூர்

### வேதனை உண்டியல்

காலம் தூக்கி எறிந்த
மனிதர்கள்.
கண்ணீரோடு ஆயுள் முடிக்க
இருதயங்கள்
தேதிகள் கொடுத்துப் போன
துன்பதினங்கள்

வறுமையில் மனம் நொருங்கி
வயிற்றுக்குக் குற்றம் புரிந்த
நிரபராதிகள்.
இருள்கள் மட்டும்
கனவு கண்ட இராத்திரிகள்
பகல் ஏழைகள் அழும்
வெளிச்ச விளம்பரங்கள்

சிலுவைகளோ
உயிர் பின் சாட்சியங்கள்
ஆணிகள் மரணத்தின்
குற்றவாளிகள்

மைதானத்தைச் சீரமைக்கத்
தெரிந்த மனிதருக்கு
மனிதர்களைச் சீர்படுத்த
தெரியவில்லையே
சமூகத்திற்கு!

செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு - 12

### காதலி

காவியங்கள் வெந்நீரில்
கரைய...
ஓவியங்கள் செந்நீரில்
நனைய...
காதலின் நினைவுகளை
தண்ணீரில்...
மிதக்க விட்டு
கண்ணீரால் நனைகின்றேன்
தினம் தினம்
காதலியே உனக்காக.

து.வசி
சிறுவையூர் ஜனசக்தி



### வில்லங்கங்கள்

நியாயத்திற்காய்
குரல் கொடுக்க
நினைத்த எமக்கு
அநியாயத்தின் வார்ப்புகள்
அணியாகத் தொடர்ந்தது.

வாய்ப்பேச்சை நிறுத்தென்று
வகையாக சொல்கிறார்
உள்மனம் என்ன?
உயிரற்ற பொருளா

விளங்காத லீலைகள்
வில்லங்க வார்ப்புகள்
பொல்லாத பெயர்களிலே
விலை கொடுத்து வாங்கிறார்

எந்நிலை எதுவென்று
நாமறிந்த போதிலும்
மற்றோர் எமை
சாடுவது எதற்காக

நெய்தல் மகன்
வே.அகிலேஸ்வரன்

### இமயம் தொட...

விதி உனை
விட்டுவைக்கவில்லையென
விரக்தி கொள்ளாதே
விதைத்த விதை
மழை கண்டவுடன்
முளைத்தெழுகிறதே!
விதை போல் தான் நீ
முளைத்தெழுவாய்
விருட்சமாவாய்


மாவை. நா.கஜேந்திரா

### சாம்ராட்சியம்



உனக்காக நான்
தினம் தினம் உயிர்வாழ
உரசிய இடைவெளிகள் கூட
இல்லாது போகும் படி
இதயத்தை ஏனடி
பிடுங்கிச் சென்றாய்
உன் உதட்டில் வரும்
சில வார்த்தைகளை விட
மௌனத்தை பரிசளி
நான் உயிர் வாழ்வேன்
மறப்பதற்காய் அல்ல
காதல் இறக்காமலிருக்க

தனுப்பிரியன்
நல்லூர்



## மௌனத்தின் தேடல் - 35

### தடை தாண்டி

கொடிய யுத்த
வடுக்களின்
விம்பம் உன்
முகத்தில் தெரிகிறது
யா(து)ரும் அற்ற
ஏதிலி நீ இன்று
உன் சோகக் கதையை
யார் கேட்பர்
தடை தாண்டி
விளையாட வருவாயா

சிவநாதன்.சுரேஸ்சன்ட்
அச்சுவேலி

### குற்றம் என்னவோ

சின்னஞ்சிறு வயதில்
சிறைக்கம்பியின் பின்னால்
ஏக்கத்துடன் இருக்கும்
சிறுவன் இவன்
செய்த குற்றம்
என்னவோ?

கு.விஜிதன்
முல்லையூர்

### மனித நேயம்

இரு கம்பி நடுவினில்
இளமைதனைக்
சிறைவைக்க - இந்த
சின்னஞ்சிறுசு செய்த
தவறு என்ன?
மனித நேயம்
மரணித்துப்போன இம்
மண்ணில் பிறந்ததா?

த.சக்திவேல்
பருத்தித்துறை

### பிஞ்சு மனம்

சிறிய இதயத்தின்
பெரிய கனவு
வாழுமிடத்தில்
வேதனை பெரிது
முகத்தில் தெரிகிறது
ஏக்கம்
உறவைத்தேடி
உணர்வுள்ளது
உள்ளத்தில் உறங்கியபடி

வி.கயேந்திரன்
யா/நெ.ம.ம.வி

### விடிவு

துள்ளி விளையாடி
பள்ளி செல்லும் வயதில்
பாலகன் முன்னால்
சிறைக்கம்பித் தடையா?
கவலை விடு தம்பி - உந்தன்
தடைதகர்ந்து விடிவு
ஒன்று விரைவாய்வரும்

வி.ஸ்ரீதேவி
துன்னாலை

### யாருளரோ?

பெற்றோர்கள் அணைப்புமில்லை
பிறந்தோர்கள் துணையுமில்லை
பள்ளிப் படிப்புமில்லை
பாலகனின் பரிதாபத்தை
பகிர்ந்திட யாருளரோ?

தங்கத்தமிழன்
காரைநகர்

### எங்கே நிம்மதி

உனை ஈன்றவர் எங்கே?
உன் கண்ணீர் என் விழியை நனைக்கிறது!
உனை அணைத்திட மனம் ஏங்கிறது!
"நீ" சிறையில் அல்லவா வாடுகிறாய்!
"நீ" செய்த குற்றம் தான் என்ன?

இ.தர்மசாந்தினி
குப்பிளான்

### மனித உரிமை

கூண்டுக்குள் ஏங்கும்
குழந்தையே!
மாவின் விலைதான்
இங்கு அதிகம்
மனித உரிமைகள்
மலிவுதான்
உனக்காக இங்கு
யார் அழுவது
எவரிடமும் இங்கு
கண்ணீர் இல்லை

பற்றூரான்
பருத்தித்துறை

### யாரோ?

கணக்கு எண்ண வேண்டிய
உன் கைகள்- கம்பி
எண்ணக் காரணம் யாரோ
பள்ளிச் சிறுவனே பதில் கூறு

இளவரசி பொன்ராசா
பருத்தித்துறை


### சிறைக்குள்

தம்பியே - நீ
கலங்காதே - நீ
மட்டுமல்ல - உன்
இனமே இன்று
சிறைக்குள் தான்

அருமை-அன்பு
கொற்றையூர்

## சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 36



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 17.09.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# ஜனாதிபதி மூன்றாம் தவணைக்காக ஆட்சி நடத்துவதற்கு அனுமதியோம்



## ரணில் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக ஆட்சிநடத்துவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரே அடுத்த ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொள்வார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்கு எதிராக செயற்படுவோரின் உறுப்புரிமை இரத்து செய்யப்படும் அதேவேளை கட்சிக்கு ஆதரவாக செயற்படுவோருக்கு உறுப்புரிமை வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சில உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதனால் கட்சி வீழ்ச்சியடைந்து விடாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியை இல்லாதொழிப்பதற்கு சில தரப்பினர் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் இந்த சதித் திட்டத்தை கட்சி இனங்கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரவள பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வெகு விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய யாப்பு விதிகள் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாட்டிலுள்ள 13 விமான நிலையங்களை — புனரமைப்பதற்கு நடவடிக்கை —

உள்ளூர் விமானப் போக்குவரத்தை அதிகரிக்கும் நோக்குடன் விமானப் போக்குவரத்து அமைச்சு நாட்டிலுள்ள 13 விமான நிலையங்களை புனரமைப்புச் செய்யவுள்ளது.

மட்டக்களப்பு,அம்பாறை,திருகோணமலை, பொலனறுவை, கிங்குறாங்கொடை, கட்டுக்குருந்த,பலாலி, இரத்மலானை, கொக்கரல்ல, வீரவில,சிகிரிய, காங்கேசன்துறை மற்றும் வவுனியா ஆகியவிமான நிலையங்கள் புனரமைக்கப்பட்டு ஓடு பாதைகளும் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இதற்காக விமானப்படை, விமானப் போக்குவரத்துக் கம்பனி,உல்லாசப் பயணச் சபை ,மிஹின் லங்கா சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆரம்ப கட்டமாக கொக்கல, இரத்மலானை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று விமான நிலையங்களும் புனரமைக்கப்பட்டும் பலாலி,இரத்மலானை விமான நிலையங்களின் வசதிகளும் அதிகரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கென நடுத்தரப் பயணிகள் விமானங்களும் இறக்குமதி செய்யப்படவுள்ளன. 2சிபிளேன்,2எம்ஏ 60 விமானம் என்பன குறுகிய தூரசேவைகளுக்கு பொருத்தமாக இருப்பதால் அவை இறக்குமதி செய்யப்படவுள்ளன.

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையே விமானப் பயணத்துக்கு அதிக தேவையிருப்பது கவனத்திற் கொள்ளப்பட்டுள் ளது. உல்லாசப் பயணிகளை கவருவதும் இதன் நோக்கமாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட இந்த விமான நிலையங்கள் யுத்தம் காரணமாக புனரமைக்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நேரக்குறியீட்டு முறையுடனான புதிய போக்குவரத்து சமிக்ஞை அறிமுகம்

(கொழும்பு)

விபத்துக்கள் மற்றும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் முகமாக கொழும்பிலுள்ள பல சந்திகளில் நேரக் குறியீட்டு முறையுடனான புதிய போக்குவரத்துக் கட்டுப் பாட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ப மேலும் பல சமிக்ஞைகள் பொருத்தப்படும் என கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளர் ஓமர் காமல் தெரிவித்தார்.

விபத்துகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருக்கின்ற இடங்கள் என அடையாளம் காணப்பட்ட சந்திகளில் இப் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டம் கொழும்பில் முதலில் அமுல்படுத்தப்பட்டு பின்னர் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பயணத்தை ஆரம்பிக்கும் முன் பயணப் பாதையைத் திட்டமிடுமாறும் பாடசாலை மற்றும் அலுவலக நேரங்களில் போக்குவத்து நெரிசல் குறித்து கொழும்பை போக்குவரத்து நெரிசல் குறைவான நகரமாக்குவதற்காக ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்குமாறு வாகன சாரதிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். (ஸ்ரீ-2)

## வடக்கு,கிழக்கில்

# 25 கரையோரப் பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு பிரதேசங்களில் 25 கரையோரப் பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு , கிழக்கு கரையோரப் பகுதிகளில் சுமார் 25 கரையோரப் பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்ற காரணத்தினால் இவ்வாறு முகாம்கள் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடற்படை முகாம்கள் ஒரே வலையமைப்பின் கீழ் உருவாக்கப்படவுள்ளதாகவும் வடக்கு , கிழக்கின் சகல கேந்திர நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்தக் கடற்படை முகாம்கள் நிறுவப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# 12.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 1609 - ஹென்றி ஹட்சன் ஹட்சன் ஆற்றைக் கண்டுபிடித்தார்.
- 1683 - ஒட்டோமான் பேரரசைத் தோற்கடிக்கும் முயற்சியில் பல ஐரோப்பிய நாடுகள் வியென்னாவில் இடம்பெற்ற போரில் ஒன்றிணைந்தன.
- 1759 - பிரித்தானியப் படையினர் கியூபெக் நகரைக் கைப்பற்றினர்.
- 1848 - சுவிட்சர்லாந்து கூட்டமைப்பு ஆட்சியை நடைமுறைப்படுத்தியது.
- 1857 - வட கரொலைனாவில் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 426 பேர் கொல்லப்பட்டனர். இக்கப்பலில் 13 - 15 தொன் தங்கம் கொண்டு செல்லப்பட்டது.
- 1890 - ரொடீசியாவில் சலிஸ்பரி நகரம் அமைக்கப்பட்டது.
- 1933 - அணுக்கரு தொடர்வினை குறித்த கருத்தை முதன் முதலாக லியோ சிலார்ட் அறிவித்தார்.
- 1940 - நியூ ஜேர்சியில் தொழிற்சாலை ஒன்றில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 51 பேர் கொல்லப்பட்டு 200 பேர் காயமுற்றனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: நட்பு நாடுகளின் போர்வீரர்கள், இத்தாலியப் போர்க்கைதிகள், மற்றும் பொதுமக்களை ஏற்றிச் சென்ற லக்கோனியா என்ற கப்பல் மேற்கு ஆபிரிக்காவில் ஜெர்மனியர்களால் தாக்கப்பட்டு மூழ்கியது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி வீட்டுக்காவலிலிருந்து ஜெர்மனிய படைத்தளபதி "ஒட்டோ ஸ்கோர்செனி" என்பவனால் விடுவிக்கப்பட்டார்.
- 1948 - முகமது அலி ஜின்னா மறைந்த அடுத்த நாள் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் ஐதராபாத் மாநிலத்தினுள் நுழைந்தது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.
- 1953 - நிக்கிட்டா குருசேவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1959 - லூனா 2 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் ஏவியது. சந்திரனை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1974 - எதியோப்பியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மன்னர் ஹைலி செலாசி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1977 - தென்னாபிரிக்காவின் நிறக்கொள்கைக்கெதிராக போராடிய ஸ்டீவ் பைக்கோ பொலிஸ் காவலில் இருந்தபோது கொல்லப்பட்டார்.
- 1980 - துருக்கியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1992 - நாசாவின் எண்டெவர் விண்ணோடம் கருப்பு-அமெரிக்கப் பெண்ணான மேய் சரோல் ஜமிசன் என்பவருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2001 - அவுஸ்திரேலியாவின் மாநிலங்களுக்கிடையேயான முதலாவது பயணிகள் போக்குவரத்து விமான சேவையான ஆன்செட் ஆஸ்திரேலியா மூடப்பட்டது. 10 ஆயிரம் பேர் வேலையிழந்தனர்.
- 2005 - இஸ்ரேல் காசாப் பகுதியில் இருந்து தனது படைகளை முற்றாக விலக்கியது.
- 2005 - ஹொங்கொங்கில் ஹொங்கொங் டிஸ்னிலாண்ட் திறக்கப்பட்டது.
- 2006 - பாப்பரசர் பதினாறாம் ஆசீர்வாதப்பர் ஜெர்மனியில் நிகழ்த்திய உரையின் போது "தீங்கு விளைவிக்கிற மற்றும் மனிதத் தன்மையற்ற விடயங்களையே நபிகள் நாயகம் இவ்வுலகிற்கு அளித்தார்" என்று தெரிவித்தார். இதற்கு இஸ்லாம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து பாப்பரசர் மன்னிப்புக் கேட்டார்.


### பிறப்புகள்

- 1832 - சி.வை.தாமோதரம்பிள்ளை, தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி (இ. 1901)
- 1913 - ஜெசி ஓவென்ஸ், அமெரிக்க தட கள ஆட்டக்காரர் (இ.1980)
- 1943 - மைக்கல் ஒண்டாச்சி, இலங்கையில் பிறந்த எழுத்தாளர்
- 1969 - கப்டன் மொறிஸ், விடுதலைப் புலிகளின் போராளி (இ.1989)
- 1980 - யாவ் மிங், சீனக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1612 - நான்காம் வசீலி, ரஷ்யப் பேரரசன் (பி. 1552)
- 2009 - நார்மன் போர்லாக், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1914)

**கி.மு.490 - கிரேக்கம் மரதன் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் பாரசீகத்தைத் தோற்கடித்தது. பிடிப்பிடஸ் என்ற கிரேக்க வீரன் இவ் வெற்றிச் செய்தியைத் தெரிவிக்க நெடுந்தூரம் ஓடினான். மரதன் ஓட்டப் போட்டிக்கு இதனாலேயே இப்பெயர் இடப்பட்டது.**



# ஈழத்தவர் வரலாறு

33

## 5. யாழ்ப்பாண இராச்சியம் ஆரியச்சக்கரவர்த்திகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

**சாவகமன்னன்**

காலிங்க ஆரியச்சக்கரவர்த்திக்குப் பின் அவன் மகன் குலசேகரசிங்கையாரியன் அரச கட்டிலேறினான் என வரலாற்றறிஞர் பலர் கூறியுள்ளனர். ஆனால் காலிங்க ஆரியச்சக்கரவர்த்திக்குப் பின் வடவிலங்கையை ஒரு சாவகமன்னன் ஆண்டுள்ளான் என்பதற்குச் சான்றுகளுள்ளன. கி.பி.1247 ஆம் ஆண்டு சந்திரபானு என்ற சாவகன் (யாவா நாட்டைச் சேர்ந்தவன்) சிங்கள அரசின் மீது படையெடுத்தான். அவ்வேளை சிங்கள மன்னனாக விளங்கிய இரண்டாம் பராக்கிரமபாகு இந்தப் படையெடுப்பை முறியடித்துச் சந்திரபானுவைத் துரத்தியடித்தான்.

தெற்கிலங்கையில் தோல்வி கண்ட சந்திரபானு வடக்கிலங்கையில் வெற்றி பெற்று அங்கு தோன்றியிருந்த புதிய இராச்சியத்தின் ஆட்சியாளனாக மாறியிருக்கலாம் என இந்திரபாலா கருதுவது ஏற்புடையதாகும். எனவே காலிங்க ஆரியச்சக்கரவர்த்தியின் அரியணையைச் சந்திரபானு என்ற சாவக மன்னன் கவர்ந்து கொண்டான். அவனோடு வந்தவர்கள் குடியேறிய பகுதிகள் தாம் சாவகச்சேரி, சாவகன் சீமா, சாவகன் கோட்டை என வழங்கப்படுகின்றது. அவன் சிங்கள இராச்சியத்தை இரண்டாம் முறை தாக்குவதற்காக படை திரட்டினான். பதீ (பதவியா), குருந்தீ (குருந்தனூர்) மாவட்டங்களிலும் பிற மாவட்டங்களிலும் வசித்த சிங்களவரைத் தன்பக்கத்தில் சேர்த்துக் கொண்டான் எனச் சூளவம்சம் கூறுகிறது.

இவன் சிங்கள இராச்சியத்தின் மீது படையெடுப்பதற்கு முன்னர் 1258இல் சுந்தர பாண்டியன் சாவகனை வென்று திறைபெற்றுச் சென்றான்.

அவன் திறையை ஒழுங்காகச் செலுத் தாமையினால் 1262இல் ஜடாவர்மன் வீரபாண்டியன் சாவக மன்னனைத் தண்டிக்க அல்லது இரண்டாம் பராக்கிரமபாகுக்கு உதவ படையெடுத்தான். அவ்வேளை சாவக மன்னன் சிங்கள அரசன் மீது இரண்டாவது தடவையாகப் படையெடுத்துச் சென்றிருந்தான். அதன் பின் திரிகூடகிரியிலும் கோணாமலையிலும் இரட்டைக்கயல் இலச்சினையை வீர பாண்டியன் பொறிப்பித்தான்.

இந்த இலச்சினை இன்றும் திருகோணமலைக் கோட்டை வாசலில் உள்ளது.




திருகோணமலை கோட்டை

**குலசேகரசிங்கை ஆரியன்**

கி.பி.1262ஆம் ஆண்டில் சாவக மன் னன் போரில் இறக்கவே யாழ்ப்பாண அரசின் மன்னனாக காலிங்க ஆரியச்சக்கரவர்த் தியின் மகன் குலசேகரசிங்கை ஆரியன் (பரராசசேகரன் 1) முடிசூடிக் கொண்டான். குலசேகரசிங்கை ஆரியன் இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கைச் சீர்படுத்தி நாட்டின் சமாதானம் நிலவ வழிசெய்தான்.

குலசேகரனையடுத்து அவனது மகனாகிய குலோத்துங்க சிங்கை ஆரியன் (செகராசசேகரன் - 2) கி.பி.1284இல் அரசனானான். மன்னார்க் கடலில் முத்துக்குளிக்கும் உரிமை சிங்கை நகர் மன்னனுக்கே உரித்தாயிருந்தது.

மன்னார் கடற்பரப்பு


சிங்கள மன்னன் புவனேகபாகு என்பான் உரிமை பெறமுயன்றதால் குலோத்துங்கன் புவனேகபாகுடன் போர் செய்து உரிமையை நிலைநாட்ட நேர்ந்தது.

குலோத்துங்கசிங்கையாரியனை அடுத்து கி.பி.1292ஆம் ஆண்டு விக்கிரம சிங்கையாரியன் (பரராசசேகரன் - 2) அரசனானான். இவன் காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் மத வேறுபாட்டால் உத்தரதேசத்தில் கலவரம் மூண்டது.

அரசன் கலவரத்திற்குக் காரணமான புஞ்சிபண்டாவையும் அவனைச் சார்ந்த பதினெழு பேரையும் பிடித்துச் சிரச் சேதஞ் செய்வித்தான்.

கலவரம் அதனால் அடங்கி யது. எனினும் இவன் காலத்தில் உத்தர தேசத்தில் வன்னிச் சிற்றரசுகள் உருவாகத் தொடங்கின. (தொடரும்)

# இந்திய மொழிகளின் மொழி பெயர்ப்பு

03

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை



கே.மலர்விழி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பெங்களூர் பல்கலைக்கழகம்

இன்னொரு பிரித்தானிய மதப் போதகரான பிஷப் கால்டுவெல் தமிழ் நாட்டில் குடியேறி, மதப் போதனை செய்வதற்காக தமிழ்மொழியைக் கற்றதோடு மட்டுமல்லாமல், தேவார, திருவாசக பக்தி இலக்கியங்கள் பால் ஈர்க்கப்பட்டு அனைத்துத் திராவிட மொழிகளையும் கற்றறிந்தார்.

“திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம” என்ற ஆய்வு நூலை சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதி “தமிழ் மொழி ஒரு தனி மொழி என்றும் வட மொழியிலிருந்து வேறு பட்டது என்றும் ஆய்ந்து கூறினார். அத்தோடு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற பஞ்ச திராவிட மொழிகள் தனிக்குடும்ப மொழிகள் என்றும் பறைசாற்றினார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுரமுரி சேஷ கிரிராயரும் பசவப்ப சாஸ்திரிகளும் சமஸ்கிருத நாடகங்கள் பலவற்றை கன்னடத்தில் மொழி பெயர்த்து அளப்பெரிய சேவைகளை செய்தார்கள்.

மராத்திய எழுத்தாளரான காண் டேகர் அவர்களுடைய சிறுகதைகளை கா.ஸ்ரீ.ஸ்ரீ தமிழிலும் சரத்சந்திர, பங்கிம்சந்திர, ரவீந்திரநாத்தாகூர் ஆகியோரின் கதைகளை, சேனாதிபதி மற்றும் குமாரசாமி ஆகியோர் தமிழிலும் மொழிபெயர்த்துள்ளார்கள்.

தமிழின் புத்திலக்கிய வளர்ச்சிக்கு பிறநாட்டு மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனிய, ரஷ்யா, ஜப்பானிய இலக்கிய தாக்கங்களும், ஹிந்தி, வங்காள, மராத்திய இந்திய மொழிகளின் சிறுதைகளும் “மணிக்கொடி” இதழில் மொழி பெயர்த்து வெளியிட்டதே ஒரு முக்கிய அம்சம் என்று மணிக்கொடி கால சிறுகதை வளர்ச்சிப்பற்றி அமெரிக்க அறிஞர் ரிச்சர்ட் கெனடி குறிப்பிடுகிறார்” (Tamil Sirukadai Varalarum - Valarchiyum Page -149) முக்கியமாக மணிக்கொடிக்கும் ஹிந்தி மொழியில் பிரேம்சந்த் நடத்திய “ஹம்ஸ்” என்ற பத்திரிகைக்கும் இடையே மொழி பெயர்ப்பு பரஸ்பரக் கொடுக்கல் வாங்கல்கள் நிலவிவந்தது (தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் Page 149) என்பது வெள்ளிடை மலையாக புலப்படுகிறது.

கெ.கெ.கங்காதரன் அதிகமாக மலையாள கதை நாவல்களை கன்னடத்திற்கு மொழிபெயர்த்துள்ளார் அதுபோல ஹிந்தி மொழியிலிருந்து கன்னடத்திற்கு ஸ்ரீநாத் போன்ற சிலர் மொழிபெயர்த்துள்ளார்கள்.

*4. தமிழுக்கும் கன்னடத்துக்கும் உள்ள மொழி பெயர்ப்புதொடர்பு*

12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஹரிஹரன் என்பவன் தமிழின் 63 நாயன்மார்களின் கதைகளை “ஹரிஹரன ரகளே” என கன்னடத்திலும் சுரங்க கவியின் “திரிஷஷ்டி புராதன சாரித்திரியாவில் அதே 63 நாயன்மார்களின் கதைகள் இடம்பெறுவதாலும் கன்னடத்திற்கும் தமிழுக்கும் உள்ள மொழித் தொடர்பு ஆதார பூர்வமாக வெளிப்படுகிறது.

ஹரிஹரன ரகளெயில் 49 நாயன்மார்களின் கதைகளும் சுரங்க கவியின் திரிஷஷ்டி புராதன சாரித்திரியாவில் 13 நாயன்மார்களின் கதைகளும் கிடைக்க பெற்றுள்ளன. ஆனால ஒரு நாயனாரின் கதை மட்டும் கிடைக்கவில்லை.

“டாக்டர் சங்கரியின் கருத்துப்படி 63 நாயன்மார்களின் கதைகளை வாய்மொழி மூலமாகவோ அல்லது சுற்றுப் பயணங்களின் மூலமாகவோ அறிந்து கன்னடத்தில் “ஹரிஹரன ரகளெ” என ஹரிஹரன் படைத்திருக்கலாம் என்று கூறுகிறார்.” (அறுபத்து மூன்று நாயன்மார்கள் பற்றிய கதை வேறுபாடுகள் Page 23, 24)

திருநீலகண்ட நாயனார் புராணம் கன்னடத்தில் திருநீலகண்ட ரகளெ எனவும், தமிழில் சிவனுடைய பாத்திரம காணாமல் போக பொன்னம்பல மூவாயிரவரின் முன் சென்று மாறுவேடத்தில் வந்த சிவன் முறையிடுவார் அதுவே கன்னடத்தில் சிவயோகி, அவையில் சென்று முறையிட அவையோர் வேணுத்தண்டின் இரு முனையைப் பிடித்து வாவியில் மூழ்குமாறு கூறுவதாகவும் அடியார் மனைவியுடன் மூழ்கி இளமையுடன் எழுந்து வர, சிவன், நிஜவடிவில் தோன்றி உலகில் சுகமான இல்லற வாழ்க்கை வாழ்ந்து மெய்யான உடம்புடன் தேவலோகம் வருமாறு காட்சியளிப்பதாய் இடம் பெறுகிறது.

சில கதைகள் ஏறத்தாழ மொழி பெயர்ப்பு போல தோன்றினாலும் ஹரிஹரன் தன்னுடைய கதையில் நாயன்மார்களின் வயதை 95-100 என குறிப்பிட்டு கூறுவதால் சிறு சிறு வேறுபாட்டை காணலாம்.

அதே நேரத்தில் தமிழில் திருநீலகண்ட புராணத்தில் “தீண்டுவிராயின் எம்மை திருநீலகண்டமென்பேன்” என்பது கன்னடத்தில் “ Muttidode Shivanaane” “தீண்டினால் சிவன்மீது ஆணை” என்று கூறுமிடத்து ஒற்றுமையும் புலப்படுகிறது. (தொடரும்)



யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், இணைய உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

## ஓய்வூதியம் பெறும் வயதெல்லையை அதிகரிப்பது குறித்து அரசு கவனம்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வதாக நீதி அமைச்சர் அதாவுத செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வருடங்களில் முதியவர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக்கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொழில் செய்யும் வயதுடைய சனத்தொகையின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் 60 வயதை அடைபவர்களுக்கு தொடர்ச்சியாக ஓய்வூதியம் வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் ஓய்வூதியம் பெறும் வயதெல்லையை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பிரதேச சபைகளூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் குறித்து ஆளுநர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிரதேச சபைகளின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையிலான குழுவொன்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது நல்லூர் பிரதேச சபையினால் 45 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் திருநெல்வேலிப் பொதுச்சந்தையைப் பார்வையிட்டு அதன் வேலைத் திட்டங்கள் பற்றி ஆளுநர் கேட்டறிந்தார்.

இவ் வேலைத்திட்ட வேலைகள் நவம்பர் மாதத்திற்குள் முடிவுற்றுச் சந்தைத் தொகுதி மக்கள் பாவனைக்கு விடப்படும் என பிரதேச சபை செயலர் ஆளுநரிடம் தெரிவித்தார்.

பின்னர் நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் அரியாலை வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளையும் அவர் பார்வையிட்டனர்.

தொடர்ந்து வலிமேற்கு பிரதேச சபையும் வேல்ட்விசன் நிறுவனமும் இணைந்து 27 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படும் அராலி வடக்கு நீர் விநியோகத் திட்டத்தைப் பார்வையிட்டு இவ்வேலைத் திட்டம் 3 மாத காலத்துக்குள் பூர்த்தி செய்யப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட வேண்டும் என ஆலோசனை கூறினார்.

மேலும் இந்நீர் விநியோகத் திட்டத்தினால் அராலி வடக்கில் 140 குடும்பங்கள் பயனடையவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பின்னர் பண்டத்தரிப்பிலுள்ள தென்னை சார் உற்பத்திப் பொருட்கள் தொழிற்சாலைக்குச் சென்று அங்கு செய்யப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டதுடன் பண்டத்தரிப்பு பெரிய விளானில் அமைந்துள்ள அந்தோனியார் முன்பள்ளிக்குச் சென்று அங்குள்ள ஆசிரியர், மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களது குறைநிறைகளைக் கேட்டறிந்தார். அத்துடன் அம்மாணவர்களுக்குப் பால்மா மற்றும் கற்றல் உபகரணங்க ளையும் அன்பளிப்பாக வழங்கினார்.

அதன்பின்னர் சாவகச்சேரிப் பிரதேசத்திற்கு சென்ற ஆளுநர் அங்கு 2.5 மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்படும் நூலகத்தின் மேல்மாடிக் கட்டடத்தையும் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையால் 3 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் மீசாலை ஊர் எல்லைத் தெரு புனரமைப்பு வேலைத் திட்டத்தைப் பார்வையிட்டதுடன் இவ்வேலைத் திட்டங்கள் அனைத்தும் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட வேண்டும் எனவும் ஆலோசனை கூறினார்.

இவ் விஜயத்தில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், பிரதிப்பிரதம செயலாளர் எஸ்.இராசநாயகம், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சாந்தசீலன் மற்றும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.ஜோன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-7)

## இலங்கைப் பிரஜை கட்டாரில் மரணம்!

கட்டாரில் வேலை பார்த்து வந்த இலங்கைப் பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் அங்கு உயிர் இழந்துள்ளார்.

விடுமுறையை கழிக்கின்றமைக்காக இலங்கையைச் சேர்ந்த சக நண்பர்களுடன் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டபோதே இவரது மரணம் இடம்பெற்றுள்ளது. இவரது மரணத்துக்கு மாரடைப்பே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (2)


இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

அனுமதி இலவசம்



Organized by pico Events

செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்,


நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF

Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL · Daily Mirror · pico

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான மஹோற்சவகால தீர்த்த்திருவிழா தினத்தன்று அகில இலங்கை திருமுறை மன்ற தேவாரப் பண்ணிசை ஆசிரியை துறைசை ஆதீன திருமுறைத்தோன்றல் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனின் முதலாமாண்டு மாணவர்கள் தேவாரப்பண்ணிசைத்துக்கொண்டு வருவதையும் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி, தேவார இசைமணி சி.தில்லைமணி, நல்லை கனகசபாபதி, திருமதி ம.சுந்தரலிங்கம் ஆகியோர் இணைந்து பாடிக் கொண்டுவருவதையும் படத்தில் காணலாம்.



# புழல்





படிப்பு ,வேலை, காதல், கல்யாணம் என கனவுகளுடன் திரியும் மூன்று இளைஞர்கள் கொலை குற்றவாளிகளாக புழல் ஜெயிலுக்கு வரும் விதத்தையும் வந்த இடத்தில் நண்பர்களாகும் மூவரும் சேர்ந்து செய்யும் கொலையும் அதன் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் ஜாமீனையும் அதன் பின் என்ன? என்பதையும் சூடாகவும் சுவையாகவும் சொல்ல முயற்சித்திருக்கும் படம் தான் புழல்!

முரளி ,ஹேமச்சந்திரன் ,மனோ ஆகிய மூன்று புதுமுகங்களும் தான் ஹீரோக்கள். அர்ச்சனா, அசுவதா, சோனம்சிங் ஆகிய மூவரும் கதாநாயகிகள். காதல் தண்டபாணி , காதல் சுகுமார், பொன்னம்பலம், ஷகீலா, ஆதவன் ,ஜூனியர் நமீதா ஆகியோருடன் இப்படத்தின் தயாரிப்பாளர் தமிழ் அமுதனும் பாத்திரமேற்று நடித்திருக்கிறார். ஏதோ புழல் சிறைச்சாலையின் அருமை பெருமைகளையும் வெறுமைகளையும் சொல்லப் போகிறார்கள் எனப் பார்த்தால் அவற்றையெல்லாம் ஊறுகாய் போல் வைத்துக் கொண்டு புழல் சிறைச்சாலைக்கு கொலை குற்றவாளிகளாக வரும் மூன்று இளைஞர்களையும் அவர்களது காதலையும் கடமையையும் கயமையை எதிர்த்து போராடும் தூய்மையையும் சொல்லி புழலை பணால் ஆக்கி விடுகின்றனர்.

நல்லதம்பியின் இசையும் கே. நித்யாவின் ஒளிப்பதிவும் புழல் சிறைச்சாலைக் காட்சிகளை பிரமாண்டப்படுத்திக் காட்டுவதைக் காட்டிலும் அந்த மூன்று இளைஞர்களின் காதல் களியாட்ட காட்சிகளில் புகுந்து விளையாடி இருக்கிறது.

இண்டர்காலேஜ் டான்ஸ் போட்டியில் இன்ஜினியரிங் படிக்கும் ஒரு ஹீரோ கமல் மாதிரி பேசி கைதட்டலுடன் ஆளுயர கோப்பையையும் பரிசாக பெறுவதில் தொடங்கி கல்லூரி தாளாளர் பொன்னம்பலம் பீஸ் கட்டமுடியாத மாணவரின் வீட்டிற்கே சென்று அந்த மாணவரின் தாயின் கற்பை சூறை யாடுவது,குப்பத்து தலைவரும்,அவரது மகனும் ஒரே பெண்ணுடன் சல்லாபம் கொள்வது,கபடி வீரனாக திரியும் ஒரு ஹீரோவுக்கு வலியச் சென்று காதல் தூது விடும் நாயகி திடீரென்று பொறுக்கியாகத் திரியும் முறைமாமனுக்கே கழுத்தை நீட்டுவது,அந்தப் பொறுக்கிக்கு எய்ட்ஸ் இருப்பதாகக் கேள்விப்பட்டதும் அவரது முதல் இரவிலேயே நாயகியைத் தன் காதலியை காப்பாற்றுகின்றேன் பேர்வழி என ஜன்னல் வழியாக நாயகி புருஷனைக் கொல்வது என ஏகப்பட்ட அபத்தங்கள்,ஆபாசங்கள்! இவை எல்லாம் போதாதென்று புழல் சிறையில் அருமை அலைஸ் எருமை என்ற பெயரில் ஒரு ரவுடி சிறைக்கு வரும் இளைஞர்களுடன் எல்லாம் ஹோமோ செக்ஸ் செய்வதை கிட்டத்தட்ட செயல்முறை விளக்க படமாக பிடித்திருப்பது என புழல் மொத்தமும் ஒரேபுகைச்சல் படம் பார்ப்பவர்களுக்கும் அதே புகைச்சல் கண்களிலும்- காதுகளிலும் உருவாகிறது என்பதாலும், இயக்குநரின் பெயரில் இருக்கும் அழகு படத்தில் இல்லாததாலும் புழல் - ஜெயில்




## சந்திரமுகி பார்ட் 2வில் அஜித்?



கன்னடத்தில் விஷ்ணுவர்தன் நடித்து சக்கைப் போடு போட்ட ''ஆப்தமித்ரா''வை தமிழில் ''சந்திர முகியாக இயக்கினார் பி.வாசு. இதையடுத்து சந்திரமுகி பார்ட் 2 எடுப்பேன் என்று வாசு கூறி வந்தார். இந்நிலையில் கன்னடத்தில் ஆப்தமித்ரா படத்தின் இரண்டாம் பாகமாக ஆப்தரக்ஷகா படத்தை எடுத்தார். விஷ்ணுவர்தன் நடித்த இப்படம் அவர் மறைவுக்கு பின் திரைக்கு வந்து ஹிட்டானது. இதை தெலுங்கில் வெங்கடேஷ் நடிப்பில் இயக்கி வருகிறார். வாசு.

இந்நிலையில் சந்திரமுகி பாகம் 2 வை தமிழில் இயக்குவதற்கான வேலையில் ஈடுபட்டிருக்கிறார் வாசு. இதில் நடிக்க அஜித்திடம் அவர் பேசியுள்ளார். இதையொட்டி ஆப்தரக்ஷகா படத்தை பார்க்க வரும்படி அஜித்துக்கு வாசு அழைப்பு விடுத்தார். சமீபத்தில் இப்படத்தை பார்த்தார் அஜித். படம் அவரைக் கவர்ந்து விட்டதாம். மற்ற பேச்சுக்கள் நடக்கிறது. சீக்கிரமே இது குறித்து முடிவாகும் என்கிறது வாசு தரப்பு.

## ஆர்யாவின் நக்கலும் நயன்தாராவின் கோபமும்



பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தின் ஓடியோ வெளியீட்டு விழாவில், மறுத்த அதன் நாயகி நயன்தாராவை, அதன் நாயகர் செமதாக்கு தாக்கினார். அம்மாம் பெரிய சத்யம் தியேட்டரில் அத்தனை பெரிய விவிஐபிக்களின் முன்னிலையில் விழாவிற்கு வராது டிமிக்கி கொடுத்த நயன்தாராவை, நயன்தாராவிற்குன்னு ஒரு பொலிஸி இருக்குதாம். அது ஏதோ இன்சூரன்சு பொலிசின்னு நினைக்கா தீங்க... இது மாதிரி அவர் நடித்த பட விழாக்களில் கூட அவர் கலந்து கொள் வதில்லை என்பதுதான் என்ன பொலிசி என்று ஆர்யா நக்கலடித்து சிரிக்க, அரங்கமே கைதட்டலில் அதிர்ந்தது.

முன்னதாக பேசிய மேற்படி பாஸ் படத்தின் தயாரிப்பாளர் கே. எஸ். சீனிவாசன் கூட, நயன்தாரா ஏதோ கன்னட படப்பிடிப்பில் வெளியூரில் இருப்பதால் வரமுடியவில்லை என்று சமாளிக்க... ஆர்யா இப்படி கிண்டலடித்திட்டு பேசியது லேட்டாகத்தான் வெளியூரில் இருந்த நயனுக்கு சென்றடைந்திருக்கிறது.

இதில் கொதிப்படைந்த நயன், ஆர்யா மீது செம கோபத்தில் இருக்கிறார். அதே நேரம் பிரபுதேவாவின் கஸ்டடியில் இருக்கும் நயன், சமீபகாலமாக சூட்டிங் ஸ்பாட்டில் தேவையில்லாமல் ஹீரோக்களிடம் பேசுவதில்லை. அந்த வயிற்றெரிச்சலில்தான் ஆர்யா இப்படி நயனை போட்டுத் தாக்கிவிட்டார் என சொல்பவர்களும் உண்டு!

## இனி எனக்காக அழவேண்டாம்... துளிகண்ணீரும் விடவேண்டாம்...

எதிர்பாராத சோகங்கள் எப்போதுமே பலமாகத் தாக்கும். அதுவும், இதயம் கவர்ந்தவர்களுக்கு நேரும் சோகம் இன்னும் பல மடங்கு வீச்சுடன் இருக்கும். நடிகர் முரளியின் திடீர் மறைவும் அத்தகையது தான். சென்னை வளசரவாக்கத்தில் வசித்து வரும் முரளியை,கடந்த 8 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு அவர் மனைவி எழுப்பினார். எந்த அசைவும் இல்லாமல் இருக்கவே, பதறிய குடும்பத்தினர் உடனே ராமச்சந்திரா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். சோதித்த டாக்டர்கள் , 'உறங்கும் போதே உயிர் பிரிந்துவிட்டது...' என்று சொல்ல... கதறலால், மருத்துவமனையே கலங்கியது.


கடந்த 84 ஆம் ஆண்டில் தன் 20 ஆவது வயதில் தமிழ் சினிமா ரசிகன் முன்பு' பூவிலங்கு' பூட்டி முரளியை நிறுத்திய விதி, 46 வயதில் அவருக்கு' மரணவிலங்கு' மாட்டிவிட்டது! மணிரத்னம் இயக்கிய முதல் தமிழ்ப்படமான 'பகல் நிலவு' படத்தின் ஹீரோ இவர் தான். 'இதயம்' படத்தின் இறுதிக் காட்சி போலவே மூடிய கண்களைத் திறக்காமல் இதயம் நிற்க இறந்து போயிருக்கிறார்.

வயதான அப்பாவின் கண் எதிரே மகன் சடலத்தைக் கிடத்தினால், அந்தத் தந்தையின் மனசு என்ன பாடுபடும்? முரளியின் அப்பா சித்தலிங்கையா முகத்தில் அது தெரிந்தது.

கன்னடத்தில் பிரபல இயக்குநராக இருந்த அவர் நம்மிடம், ''ஆரம்பத்தில் என் முகத்துக்காக சினிமாவில் நடிக்க கூப்பிட்டாங்க முரளியை. அப்புறமா தன் நடிப்புத் திறமையால் தனி இடத்தைப் பிடித்தார். தொடக்கத்தில், சித்தலிங்கையா மகன்னு முரளியை சொன்னவங்க,முரளியோட அப்பான்னு என்னை சொல்ற அளவுக்கு வளர்ந்தார். போன ஞாயிற்றுக்கிழமை தான் அவரோட பொண்ணு காவ்யாவுக்கு தாஜ் ஹோட்டல்ல நிச்சயதார்த்தம் நடந்தது...'' என்றவரால் அதற்கு மேல் பேச முடியவில்லை... மூக்குப் கண்ணாடி தாண்டிக் கண்ணீர்.

அருகில் இருந்த நடிகர் சிவகுமார்,''என்னைத்தான் எல்லோரும் சினிமாவில் 'மார்க்கண்டேயன்'னு சொல்வாங்க. ஆனா,எப்பவும் இளமையோடு தோற்றமளித்த முரளிதான் உண்மையிலேயே மார்க்கண்டேயன்...'' என்று நெகிழ்ச்சியாகச் சொன்னார், கண்ணாடிப் பெட்டிக்குள் அடர்ந்த தலைமுடியோடு இருந்த முரளியின் முகம் பார்த்த படியே.

''எனக்கும்,முரளிக்கும் சொந்த ஊர் பெங்களூர். 80-களில் சினிமாவில் ஒரே சமயத்தில் பிரவேசித்தோம். ஸ்வாகத் ஹோட்டலில் அவரும், பாம்குரோவில் நானும் தங்கி பரபரப்பா நடித்தோம். நான்தான் மைக் பிடித்துப் பாடும் காட்சிகளுக்குப் பிரபலம்னு பேசுவாங்க. ஆனா,'இதயம்' படத்தில் முரளி மைக் பிடித்த ஸ்டைலை மெய்மறந்து ரசித்தவன் நான்.'' என்று கலங்கினார் நடிகர் மோகன். காலையில் இருந்து ஒரு நிமிடம் கூட உட்காராமல், முரளி கண் மூடிக் கிடக்கும் கண்ணாடிப் பெட்டி அருகிலேயே நின்று இருந்தார், முரளியின் மகனும்,'பாணா காத்தாடி' ஹீரோவுமான அதர்வா.



முரளி

'' சின்ன வயதில் நான் முரடு. அப்போஅசோக் நகரில் வீடு. யார் எது சொன்னாலும், ஏட்டிக்குப் போட்டியா இருப்பேன். ஒரு தடவை வீட்டில் ஏதோ சொல்லிட்டாங்கன்னு கோபமாயிடுச்சு. டீப்பாய் மேல் இருந்த மலர்கொத்து பீங்கானை எடுத்து டி.வி-யை உடைக்கப் போக... எல்லோரும் பதறிட்டாங்க. ஆனா, அப்பா கூலா,'உடைடா... வேகமா உடைடா...'' ன்னு சத்தமா சொல்ல... 'நீ என்ன உடைக்கச் சொல்லி, நான் உடைக்கிறது... மாட்டேன்'னு போயிட்டேன். எங்க அப்பா இந்த சம்பவத்தை அடிக்கடி சொல்லி சிரிப்பார். செயற்கைத்தனம் இல்லாம நச்சுரலா நடிக்கிறது எப்படின்னு அவர் தான் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். அதைத்தான்'பாணா காத்தாடி' படத்தில் ஃபாலோ பண்ணினேன். வழக்கமா காலை 5 மணிக்கு எழுந்துவிடுவார். ஆனா, அப்பா எழுந்திரிக்கவே இல்லையேன்னு, ஏ.சி-யை ஒஃப் பண்ணிட்டுத் தொட்டு எழுப்பினேன். உடம்பு பூரா ஜில்லுனு இருந்துச்சு. எங்கே போனாலும் மறக்காம என்கிட்ட சொல்லிட்டுப் போறவர், இப்ப சொல்லாமப் போயிட்டாரு...'' எனக் கதறினார் அதர்வா.

சினிமாவில் சீஸன் மாற்றம் எல்லோருக்கும் இயல்பு. ஆனால், செகண்ட் ஹீரோ, அண்ணன், அப்பா என்று நடிக்க நேராமல், கடைசி வரை கதாநாயகனாகவே நடித்தார் முரளி. அன்பு மகன் அதர்வாவின் முதல் படமான 'பாணா காத்தாடி'யில் ஒரு சிறு பாத்திரத்தில் வந்து போனார். அது அப்பாவின் கடைசிப் படமாகிப் போனது தான் சோகம்.

முரளியின் நெருக்கமான நண்பர்கள் சிலரிடம் பேசினோம்.'' அரசியலே வேண்டாம் என்று எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் கேட்காமல், அ.தி.மு.க-வில் சேர்ந்தார். தலைமைக் கழகப் பேச்சாளர் மாதிரி தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊராகச் சென்று கடுமையாகப் பிரசாரம் செய்தார். கிராமப்புறங்களில், கையில் டேப்பை வைத்துக் கொண்டு தாளம் போட்டபடி, ' இரட்டை இலைக்கு ஓட்டுப் போடுங்க' என்று இராகத்தோடு பாடி, வாக்கு சேகரித்தார். தேர்தல் முடிந்த பின்னர், அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருந்தார். குறிப்பாக, அ.தி.மு.க.தலைவி ஜெயலலிதா மீது அவருக்கு ரொம்பவே மரியாதை. கொஞ்ச நாட்களாக கோவை, திருச்சியில் ஜெ-வின் பேச்சையும் கூடிய பெரும் கூட்டத்தையும் சிலாகித்துப் பேசி வந்தார்.' வரும் தேர்தலில் அம்மாவுக்காக தமிழ்நாடு முழுதும் ஒரு ஊர் விடாமல் பிரசாரம் போவேன்' என்றார். நாங்களோ,'அந்த அம்மாதான் உங்களை மதிச்சுக் கூப்பிடலியே,பின்னே எதுக்கு அதைப்பத்தியே பேசுறீங்க ...? என்ற போது ஐந்து நிமிடம் அம்மா கிட்ட பேசனும்... என் மனதில் என்ன இருக்குன்னு அவங்களுக்குப் புரியவைக்கனும்... என்று பச்சைப்பிள்ளை மாதிரி பதில் சொன்னார். ஆனால் எல்லோரும் கண் கலங்குற இந்த மரணத்துக்கு ஜெயலலிதா வரவில்லை.ஏன் அ.தி.மு.கவில் இருக்கிற ஒரு கவுன்சிலர் கூட முரளி முகத்தைப் பார்க்க வர வில்லையே...அந்தக் கட்சிக்கு தொண்டைத் தண்ணீர் தீர ஊர் ஊராகப் போய் பிரசாரம் செய்த தொண்டனுக்கு இப்படி ஒரு மரியாதை? என்று கோபத்தில் கொந்தளித்தனர்.

# பாகிஸ்தானில் இராணுவ புரட்சி ஏற்படாது



## அந்நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்படாது என்று பிரதமர் யூசுப் ரஸ கிலானி உறுதிபடத் தெரிவித்தார்.மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு தனது பதவிக்காலம் முழுவதும் ஆட்சியில் இருக்கும் என்றும் இராணுவத்தால் இந்த ஆட்சிக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது என்றும் அவர் மேலும் கூறினார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

இப்போதைய சூழலில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் இராணுவத்துக்கு இல்லை.இராணுவம் ஆட்சிக்கு வருவதற்குரிய சூழலும் இல்லை. பல்வேறு தியாகங்களுக்குப் பின் 2008 ஆம் ஆண்டில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு ஆட்சிப் பொறுப் பேற்றது.இப்போது நீதித்துறை தன்னிச்சையாக ஜனநாயக அடிப்படையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி செயற்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஒரு பகுதிதான் இராணுவம். இதைக் கருத்திற்கொண்டே வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் இராணுவத்தினர் முழுவீச்சில் ஈடுபடுகின்றனர்.

ஆனால் மக்கள் மத்தியில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிவிடும் என்பதான பேச்சு அடிபடத் தொடங்கியுள்ளது. இது போன்ற தேவையற்ற பேச்சுக்களைப் பேசி தங்களது நேரத்தை அவர்கள் வீணடித்துக் கொள்ள வேண்டாம் என்பதே எனது கருத்து என்றார். (ஸ்ரீ)

# 'கியூபா கம்யூனிசத்தால் பலனில்லை'

## பிடல் காஸ்ட்ரோ தெரிவிப்பு

(ஹவானா)

கம்யூனிசம் புரட்சி என்றதும் நாடு முழுவதும் உள்ளவர்களின் நினைவுக்கு வருவது கியூபாவாகும்.அந்தநாட்டை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருக்கும் பிடல் காஸ்ட்ரோ 1959 ஆம் ஆண்டில் மாபெரும் புரட்சி செய்து கியூபாவில் கம்யூனிச ஆட்சியை மலரச்செய்தார்.இன்று வரை அந்த நாட்டில் கம்யூனிச ஆட்சி நடைபெறுகிறது. அவருடைய தம்பி ரவுல் காஸ்ட்ரோ அதிபராக இருக்கிறார்.மிகப்பெரிய புரட்சியாளரான அவர் அமெரிக்காவை சேர்ந்த கோல்டுபெர்க் என்ற பத்திரிகையாளருக்கு சமீபத்தில் பேட்டியளித்தார்.

அப்போது கியூபா மாதிரியான புரட்சி முறையும் கம்யூனிசமும் எதிர்வரும் காலங்களில் எங்களுக்கு பலனளிக்காது என பிடல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் கியூபாவுக்கு நட்பு நாடான வெனிசுலாவில் இருந்து மானியமாக எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.சமீபத்தில் சில சீர்திருத்தங்களை மேற்கொண்ட போதிலும் பெரியளவில் எந்தவித பொருளாதார மாற்றமும் கியூபாவில் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நடந்த கூட்டத்தில் தென்கொரியா ஜனாதிபதி லீ மியுங்-பெக் மற்றும் ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் இருவரும் கைலாகு செய்து கொண்டனர்.

# புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க முஷராப் திட்டமிட்டுள்ளார்

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர்பர்வேஷ் முஷாரப் நாடுதிரும்பி புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களை கருத்திற்கொண்டு இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தற்போது லண்டனில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர் மீண்டும் பாகிஸ்தானுக்கு திரும்பி அரசியல் நடத்தக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சில மாதங்களுக்கு முன்னர் ஊடகங்கள் தகவல் வெளியிட்ட போதிலும் முதல் தடவையாக முஷாரப் தமது திட்டத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ ஆட்சி நடாத்தத் தாம் உத்தேசித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதனையும் முயற்சிக்காது இருப்பதனை விடவும் முயற்சித்து தோற்பது பெருமைக்குரியதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவச் சீருடையில் ஆட்சி நடத்திய காரணத்தினால் கடந்த காலங்களில் சர்வதேச நாடுகளிடமிருந்து போதியளவு ஆதரவு கிடைக்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச் சாட்டுக்களுக்கும் தாம் பதிலளிக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சீனாவில் புயல் தாக்கம்; 1.5 இலட்சம் பேர் பாதிப்பு

(பீஜிங்)



சீனாவில் புஜியான் மாகாணத்தை தாக்கிய புயலால், ஒன்றரை இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர். சீனாவில் மெரான்டி என்ற புயல் உருவாகியுள்ளது.

இதன் காரணமாக புஜயான் மாகாணத் தில் பலத்த மழையும் சூறைக்காற்றும் வீசி வருகிறது. கடும் மழை காரணமாக குவாங்சு, புடி யன், புசோ மற்றும் நிங்டி போன்ற நகரங்கள் வெள்ளத்தால் சூழப்படும் அபாயம் ஏற்பட் டுள்ளது. எனவே, இப்பகுதிகளைச் சேர்ந்த ஒன்றரை இலட்சம் மக்கள் முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பான இடங் களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# அரிப்பு,சிரங்கை குணமாக்க கராம்பு எண்ணெய் உதவும்

(வோஷங்டன்)

தோலில் ஏற்படும் அரிப்பு மற்றும் சொறி, சிரங்கை குணப்படுத்த கராம்பு எண்ணெய் உதவும் என நவீன ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின்ரைட் ஸ்டேட் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவின் கிரிபித் பல்கலைக்கழகம் மற்றும் குயின்ஸ்லாந்து மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் இணைந்து ஒரு ஆய்வை மேற்கொண்டனர். அதன் விபரம் வருமாறு,

ஆடு,மாடுகளின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் சிறு பூச்சிகள்(ஒட்டுண்ணி), மூட்டைப் பூச்சி மற்றும் நுளம்பு ஆகியவற்றை ஒழிக்க சில தாவர எண்ணெய் பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது. இது போன்ற எண்ணெயில் உள்ள சில இரசாயனங்கள் அத்தகைய பூச்சிகளை கொல்வது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் சொறி, சிரங்கைப்பரப்பும் பூச்சிகளை ஒழிப்பது குறித்து ஆராயப்பட்டது. பிரச்சினை உள்ள பகுதியில் யூஜெனல் என்ற மருந்து பயன்படுத்தப்பட்டது.

இது 80 சதவீதம் கராம்பு எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்டது. இதனால் சிரங்கை பரப்பும் பூச்சிகள் மற்றும் புண்களைச் சுற்றி அவை இடும் முட்டைகளையும் அழிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




# சேர்பியா,கொசோவோவை பேச்சுவார்த்தை நடத்துமாறு ஐ.நா. வலியுறுத்தல்

சேர்பியா, கொசோவோ ஆகிய இரண்டு நாடுகளையும் நேரடியான பேச்சவார்த்தை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.


இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நேரடிப் பேச்சுவார்த்தையில் சேர்பியாவும் கொசோவோவும் பங்குபற்ற வேண்டும் என ஐ.நா.பொதுச் சபை ஏகமனதாக தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு சேர்பியாவிலிருந்து தனியரசாக சுதந்திரம் பெற்று கொசோவோ சென்றமை குறிப்பிடத்தக்கது.

அதன்பின் இரு நாடுகளுக்கும் இடையிலான முதலாவது பேச்சவார்த்தைக்கான வாய்ப்பை ஏற்படுத்துவதாக இந்தத் தீர்மானம் அமைந்துள்ளது.

தனது முன்னாள் மாகாணமான கொசோவோவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சேர்பியா முன்னர் விதித்திருந்த நிபந்தனைகளையும்ஐ.நா. நிராகரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க அரசு என்பன ஏற்கனவே கொசோவோ பிரிந்து சென்று சுதந்திரம் பெற்றமையை அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ரம்ழான் புனித மாதத்தின் இறுதி நாள் ரம்ழான் திருநாளாக கொண்டாடப்பட்டது. சவுதி அரேபியாவில் உள்ள மக்கா மசூதியில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் ஒன்றாக கூடி புனிதத்தை போற்றும் வகையில் தொழுகை நடத்தினர்.

# இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி அதிக ஆர்வம்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எதிர்வரும் நவம்பர் மாதம் தான் மேற்கொள்ள இருக்கும் இந்தியப் பயணத்தை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்று வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் பி.கே.க்ரவுலி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி முதன் முறையாக எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்நிலையில், சமீபத்தில் இதுகுறித்து பேசிய அந் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரிகிளின்டன், "இந்தியாவுடனான இன்றியமையாத உறவுகளுக்கு அமெரிக்கா அடிக்கல் நாட்டியிருக்கிறது. ஜனாதிபதியின் இந்தியப் பயணம், அந்த உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவு செய்தித் தொடர்பாளர் க்ரவுலி நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறுகையில், எதிர்வரும் நவம்பர் மாதம் மேற்கொள்ளவிருக்கும் இந்தியப் பயணம் குறித்து ஜனாதிபதி ஆவலுடன் உள்ளார். ஆசியப் பகுதி மற்றும் உலகளவில் இருதரப்பு உறவும் இன்றியமையாதது.

பருவநிலை மாற்றம், உலகளவில் ஏற்பட்டுள்ள சவால்கள் போன்றவற்றில் இந்தியா தீர்வளிக்க வேண்டி வளர்ந்து வரும் சக்தியாக உருவாகிவருகிறது. சிக்கலான ஆசியப் பகுதியில் ஸ்திரத் தன்மைக்கு இந்தியா ஆதாரமாக விளங்குகிறது என்று தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## காஷ்மீரில் மீண்டும் வன்முறை வெடித்தது

காஷ்மீரில் மீண்டும் வன்முறை ஏற்பட்டதால் பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் தால் ஏரிக்கரையில் உள்ள புகழ் பெற்ற ஹசரத்பால் மசூதியில் நேற்று காலை ரம்ழான் தொழுகை நடைபெற்றது. தொழுகை முடிந்ததும் ஒரு பிரிவினை இயக்க ஆதரவு பிரிவினர் பொலிசாருக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய படி ஊர்வலமாக செல்ல முயன்றனர்.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படை வீரர்கள் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். அவர்கள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினார்கள். மசூதிக்கு அருகே பொலிசார் தங்கி இருந்த முகாமுக்கு சிலர் தீவைத்தனர். உடனே பொலிசார் தடியடி நடத்தியும் கண்ணீர் புகை குண்டுகளை வெடித்தும் அவர்களை கலைக்க முயன்றனர்.

ஆனால் கூட்டம் கலையவில்லை. இதையடுத்து பொலிசார் துப்பாக்கி சூடு நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்தனர். இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. (ஶ்ரீ-2)

## மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த குழு அமைக்கலாம்

### எழுத்தாளர் அருந்ததிராய் யோசனை

(புதுடில்லி)

மாவோயிஸ்டுகளுக்கும் - மத்திய அரசுக்கும் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடத்தி மத்தியஸ்தம் செய்ய குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் அருந்ததிராய் யோசனை தெரிவித்துள்ளார்.

இருப்பினும் மத்தியஸ்தம் செய்யும் அளவுக்கு தனக்கு அனுபவம் இல்லை என்பதால் அப்படிப்பட்ட ஒரு குழுவில் தான் இடம் பெற வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 • 08 • 1916



மறைவு 13 • 08 • 2010

### அமரர்.திருமதி.தங்கரத்தினம்.கந்தசாமி

அன்பு மழை பொழிந்து ஆறுதலைச் சொரிந்து
துன்பமெமை அணுகாமல் துணையாய் துணிவுதந்து
இன்றுவரை எம் வாழ்வில் தீபமாய் ஒளி கொடுத்தீர்
என்றுமெம் உள்ளத்தில் அணையாத சுடரானீர்

கடந்த 13.08.2010 அன்று சிவபதமடைந்த எங்கள்அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி, தொலைநகல், கடிதம் மூலம்அனுதாபம் தெரிவித்தோர்க்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி புரிந்தோர்க்கும் பத்திரிகை துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியோர்க்கும் பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


சிலவை,
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.
12.09.2010

(2450)

திரு.திருமதி.சிவாஜி
திரு.திருமதி.சிவராஜசுந்தரம்

## டில்லியில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கால் மக்கள் பாதிப்பு

(டில்லி)



யமுனை நதியில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளப் பெருக்கால் டில்லி நகரில் பல்லாயிரக்கணக்கானோர் வெள்ளத்தில் சிக்கித் தவித்து வருகின்றனர். இதனையடுத்து பேரிடர் மீட்புக்குழு அமைக்கப்பட்டு வெள்ளத்தில் சிக்கியோரை மீட்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக யமுனை நதியில் கடந்த 32 ஆண்டுகள் இல்லாத அளவிற்கு பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அபாய அளவைத் தாண்டி யமுனை நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதால் தலைநகர் டில்லியின் பல இடங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. டில்லியின் தாழ்வான பகுதிகளும் அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் மிகப் பெரிய பொருட் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே டில்லியில் தாழ்வான பகுதியில் சிக்கிய 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் பேரிடர் மீட்புக்குழு அமைக்கப்பட்டு 74 படகுகளின் உதவியுடன் மீட்புப் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. (ஶ்ரீ-2)

## விழிநீர் சொரிந்து...

அமரர்
யதுகுலசிங்கம் வைகுந்தன்
(குந்தன்)
(முகாமையாளர் - கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)



நெஞ்சம் கனக்குதையா
விழிநீர் சொரியுதையா
துஞ்சிய எங்கள் அன்புக்
குந்தனே நீர் எங்கு சென்றீர்?
வஞ்சித்த காலன் உம்மை
வானவராக்கி விட்டான்
நஞ்சணி கண்டர் பதம்
நாடியோ சென்று விட்டீர்?

அன்னையின் மடியில் 05.09.1973

ஆண்டவன் மடியில் 09.09.2010

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
யாழ்ப்பாண வணிகநிலையம்,
யாழ்ப்பாண இரும்பகம், கதிரவன் இரும்பகம்,
JT ரான்ஸ்போட், கிருஸ்ணா தொலைத்தொடர்பக
உரிமையாளர்களும், ஊழியர்களும்

12.09.2010

(2451)




விநாயகர் சதுர்த்திக்காக மும்பையில் முழுமையாக சொக்லேட் மற்றும் பிஸ்கட்டுகளால் தயாரிக்கப்பட்ட இந்த விநாயகரை குழந்தைகளுக்கு ரொம்பவே பிடிக்கும் தானே.

வயிற்றை பற்றி மட்டுமே நினைப்பவன் தலையை பட்டினி போடுகிறான்.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழருக்கு வேண்டியதெல்லாம் ஆரோக்கியமான அரசியல் தலைமை

இலங்கைத் தமிழர்களின் தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்திற்குரியதும் கவலைக்குரியதுமாகும். எனினும் அந்த ஆபத்தை உணரக் கூடியதும் அதற்கேற்றவாறு சர்வதேசத்தின் உதவியை நாடக்கூடியதுமான அரசியல் தலைமை தமிழ் மக்களுக்கு இல்லாமல் இருப்பது மிகப்பெரும் துரதிர்ஷ்டமே.

ஏ–9 பாதை திறக்கப்பட்டமை எங்களில் பலருக்கு எல்லாப் பிரச்சினையும் முடிந்துவிட்டதென்னும் மாயையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு அப்பால் கையடக்கத் தொலைபேசிகளின் அதீத பயன்பாடு எங்கள் இளம் சமூகம் சிந்திப்பதற்குத் தடை விதித்துவிட்டது.

இதனோடு வங்கிகளின் வருகை, வர்த்தக நிறுவனங்களின் ஆக்கிரமிப்பு, தென்பகுதி மக்களின் படையெடுப்பு, இடையிடையே கலகலப்பை ஏற்படுத்தும் இசை நிகழ்ச்சிகள், தாராளமான மதுபானசாலைகளின் இருபத்துநான்கு மணிநேர சேவை, மக்களின் பணத்தை வாரிச் சுருட்டும் நிதிக் கம்பனிகளின் பிரசாரங்கள் எனஅத்தனையும் எங்களை புது உலகுக்கு அழைத்துச் சென்றுவிட்டன.

இந்த புது உலகில் நிற்கும் எங்களால் முள்ளிவாய்க்கால் துயரங்களையோ, வன்னியில் மீள் குடியமர்ந்த மக்களின் அவலங்களையோ– படையினரிடம் தஞ்சமடைந்தவர்களின் நிலையையோ–சிறைகளில் வாடும் உறவுகள் பற்றியோ ஒட்டுமொத்தத்தில் தமிழர்களின் எதிர்காலம் பற்றியோ சிந்திக்க முடியாதென்பது தெரிந்த விடயமே.

இந்த இக்கட்டான நிலைமையில் தமிழர்களின் அரசியல் தலைமைகள் ஆரோக்கியமற்றவையாகவும், புத்திசாலித்தனம் இல்லாதவையாகவும் சொந்த நலனை மட்டுமே மையமாகக் கொண்டு தந்திரமாக இயங்குபவையாகவும் உள்ளன.

இந்நிலையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற விடயங்களில் இவர்கள் தலையிடுவார்கள் அல்லது அதனை தடுத்து நிறுத்துவார்கள் என எதிர்பார்ப்பது மடமைத்தனம்.

ஆகையால் தமிழ் மக்கள் தற்போது இருக்கக்கூடிய ஆபத்தான சூழமைவை எதிர்கொள்ளக்கூடியதான அரசியல் தலைமை ஒன்றை உடனடியாக உருவாக்க வேண்டும்.

அரசியல் தலைமையில் புத்திஜீவிகளின் பங்களிப்பு கட்டாயமானதாகும்.

அரசியல் தலைமை என்பது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துடன் சம்பந்தப்படுவதாக எவரும் நினைக்க வேண்டியதில்லை.

இப்போதெல்லாம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தமிழ் மக்களுக்குத் தேவையற்றதாகிவிட்டது. அந்தப் பதவியால் எதையும் செய்ய முடியாது. இதுவே உண்மை.

எனவே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை தூக்கி எறியவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து சொகுசு வாகனங்களுக்கான பத்திரங்களைப் பெற்று அவற்றை விற்று பணத்தை எடுத்துக் கொண்டதைத் தவிர வேறு எதனைத்தான் அவர்களால் செய்ய முடிந்தது. ஆகவே புதிய அரசியல் தலைமையின் உருவாக்கத்துடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்வதனையும் மக்கள் வலியுறுத்தவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தும் எதனையும் செய்ய முடியவில்லை. அல்லது செய்யத் தெரியவில்லை என்றால் அந்தப் பதவி தேவையற்றது. பெறுமதியற்ற பதவியைவிட அதைவிடுத்து சும்மா இருப்பது பெறுமதியானதாகும். எனவே தமிழர்களுக்கான புதிய அரசியல் தலைமையை உருவாக்குவது தொடர்பில் தீவிரமான ஆராய்வுகளும் ஆலோசனைகளும் செயலாக்கங்களும் தேவை.

# நாடாளுமன்றத்தில் தனித்து செயற்படுவேன் இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தன்னுடன் எந்தவிதமான தொடர்பையும் பேணாமல் தன்னைத் தொடர்ந்து ஒதுக்கிவைக்கும் போக்கைக் கடைப்பிடிப்பதால் தனக்கு வாக்களித்த மக்களுக்கு சேவையாற்றும் வகையில் நாடாளுமன்றத்தில் தனித்து செயல்படப்போவதாக நுவரேலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் மலையக மக்கள் முன்னணியுடன் இணையப்போவதாக செய்தி வெளியாகியிருந்தது. அச் செய்திகளுக்கு அவர் இவ்வாறானதொரு சூழ்நிலையில் தற்போதைய அவரின் அரசியல் செயற்பாடுகள் குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு இவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இ.தொ.காவிலிருந்து மலையக மக்கள் முன்னணியுடன் இணையவுள்ளதாக வெளியான தகவல்தான் இ.தொ.காவுக்கும் எனக்கும் ஏற்பட்ட முரண்பாடு என்று சிலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறில்லை. பொதுத்தேர்தல் முடிந்து குறுகிய காலத்துக்குள்ளேயே நான் இ.தொ.காவிலிருந்து ஓரங்கட்டப்பட்டு விட்டேன்.

ஜனாதிபதி அமைச்சுப்பதவி வழங்கியபோது நான் எனக்கு பிரதியமைச்சர் பதவி ஒன்றைப் பெற்றுத்தருமாறு இ.தொ.காவின் உயர் பீடத்திடம் கேட்டிருந்தேன். இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவுமில்லை. எனக்கு பதிலளிக்கவுமில்லை. ஆனால் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எனக்கு நெருக்கமான ஒருவரிடம் எனக்கு எவ்விதத்திலும் பிரதியமைச்சுப்பதவி ஒன்றைப் பெற்றுத்தரமாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

நான் அவரிடம் பிரதியமைச்சுப்பதவி கேட்டதால் என்னை ஓரங்கட்ட நினைத்து இ.தொ.காவின் எந்த விழாவிற்கும் என்னை அழைக்கவில்லை. மத்திய மாகாணத்தில் நான் பல வருடங்களாக அமைச்சராகவிருந்த அனுபவமிருந்ததால் தான் எனக்கு வாக்களித்த மக்களுக்கு சேவை செய்வதற்காக அமைச்சுப்பதவி கேட்டேன். இதுதான் நியாயம். இதற்காக என்னை ஓரங்கட்டிவிட்டார்கள். எனவே நான் நாடாளுமன்றத்தில் தனித்துச் செயற்படுவேன் என்றார் அவர். (ந–5)

# ஜனாதிபதி அடித்த துடுப்பு மட்டையால் சர்ச்சை

அண்மையில் பதுளையில் நடைபெற்ற கிரிக்கெட்மைதான திறப்பு விழாவின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துடுப்பெடுத்தாடி விளையாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது அவர் எஸ்.எப்.என்ற ரகத்தை சேர்ந்த துடுப்பை கொண்டே பந்தை அடித்தார். இந்த விடயம் அப் போது பெரியளவில் பேசப்படாத போதும் பின்னர் அரசியல் பிரச்சினையை உருவாக்கியுள்ளது.

எஸ்.எப்.எனப்படுவது ஜனாதிபதியின் அரசியல் எதிரியான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை குறிப்பதாகும். இதனை வைத்துக் கொண்டே கடந்த ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகா தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில் கிரிக்கெட் துடுப்பாட்ட விடயம் ஜனாதிபதிக்கு தெரியவரவே அவர் சார்ந்த அதிகாரிகள், ஜனாதிபதி துடுப்பெடுத்தாடும் வகையில் அமைந்திருந்த துடுப்பில் உள்ள எஸ்.எப்.என்ற எழுத்துக்களை மறைத்து பிரசுரிக்குமாறு பத்திரிகைகளுக்கு உத்தரவிடப்பட்டதாம். தொலைக் காட்சி படங்களிலும் எஸ்.எப்.எழுத்துக்களைக் காணமுடிய வில்லை. (ந–5)

# வன்னியில் மீள் குடியேறிய மக்களுக்கென இந்திய மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சீமெந்துப் பக்கற்றுக்கள் வவுனியாவில் பதுக்கல்

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்தின் போது மக்களுக்கு வழங்குவதற்கு இந்திய மக்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட சீமெந்துப் பக்கற்றுகளில் 1500 இற் கும் மேற்பட்டவை வவுனியா பல நோக்கு கூட்டறவுச்சங்க கட்டடத் தொகுதியில் அரச அதிகாரி ஒருவரினால் பதுக்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இவை மேற்படி இக்கட்டடத்தில் அடுக்கப்பட்டதாகவும் அவ்வேளையில் ஒரு சில சீமெந்துப் பக்கற்றுகளை மீள் குடியேற்றிய மக்களுக்கு வழங்கிய பின்னர் ஏனையவை பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேற்படி பக்கற்றுகள் அடுக்கி வைக்கப்பட்டு நீண்ட காலமாக தமது கட்டிடத் தொகுதியில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல நோக்கு கூட்டறவுச் சங்கத்தினர் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அறிவிக்காமை தொடர்பிலும் பல்வேறு சந்தேகங்கள் நிலவுவதுடன் கடந்த வாரம் பாரவூர்திகளில் சில சீமெந்துப் பக்கற்றுகள் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட தாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் கொட்டகைகளில் வாழ்ந்து வரும் நிலையில் அவற்றை அவர்களுக்கு வழங்காது வீண் விரயம் செய்தவர்கள் மீது இதுவரை எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை எனவும் வவுனியா பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

பல இலட்சம் பெறுமதியான சீமெந்துப் பக்கற்றுகள் பழுதடைந்தமை தொடர்பில் விசாரணை செய்வதற்கென தற்போது வவுனியா அரசாங்க அதிபரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ந–5)

# பளை கிழக்கில் மீள்குடியேற்றம்

(வேலணை)

கிளிநொச்சி மாவட்டம் பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 3 கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது.

பளை கிழக்குபகுதியில் உள்ள இயக்கச்சி, கோவில் வயல் முகாவில் ஆகிய கிராம சேவையலுவலகர் பிரிவிலுள்ள மக்களே மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது. (ஸ்ரீ–2–22)


# எது பெரிது- மனம் திரும்புதலா? மன்னித்தலா?

வரம்பு கடந்து பிறர் செய்த தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்து விடுதல் பொறுத்தலைவிட நல்லது.

ஆம், குறைவுள்ளவன் மனிதன். காரணம், அது அவனின் பிறப்பின் வெகுமதி. மானிட உடல் கொண்ட அனைவரும் குறை இயல்பு உடையவர்களே. எனவே அனைவரும் தவறு செய்யக் கூடியவர்கள் தான். தவறு செய்யாத மனிதர்களே கிடையாது. ஒரு புனிதனே ஒரு நாளைக்கு ஏழு முறை தவறு செய்கின்றான். அப்படியிருக்க நாம் எம்மாத்திரம்? தவறு செய்துவிட்டோம் என்று சொல்லி வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதைவிட அந்த தவறு உணர்த்திய பாடத்தைக் கற்றுக் கொண்டு மனம் திருத்தி அந்தத் தவறைச் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அங்கு தான் இறைவன் வாழ்கிறான்.

எனவே, தவறு செய்த பின் ஏற்படுகின்ற துன்பத்தைவிட அந்தத் தவறிற்காக மனம் வருந்தி திருத்தி வாழும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இங்கு தான் இன்றைய நற்செய்தி நமக்குப் பொருத்தமாக அமைகிறது. இயேசுவும் அதைத்தான் உறுதி செய்தார்.

மனம் மாறத் தேவையில்லாதத் தொண்ணூற்று ஒன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும். மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (லுக் 15:4) என்றார்.



ஆம், அடுத்தவரை மன்னிக்காத மனிதன் தான் நடந்து செல்லும் பாலத்தை தானே அழித்துக் கொள்வான் என்று ஜோர்ஜ் எர்பெர்ட் கூறுகிறார்.

உன்னுடைய எதிரி உனக்கு துன்பத்தை விளைவித்தால் அவனை மன்னித்து விடு இல்லையென்றால் அங்கு இரண்டு எதிரிகள் உருவாகி விடுவார்கள் என்று அகுஸ்தினார் கூறுகிறார்.


எனவே எதிரிகளை வளரவிடக்கூடாது என்றால் அங்கு மனம் திருந்துதலும், மன்னித்தலும் வளர வேண்டும்.

## பரமபிதா காட்டிய பாதை

அதாவது காணிக்கையை விட மன்னிப்பது என்பது எவ்வளவு உயர்ந்தது, முக்கியமானது என்பதை ஆண்டவர் தெளிவுபடுத்துகிறார்.

ஆம், மனம் மாற்றம் இருக்கும் போது மன்னிப்பு தானாகவே வந்து சேரும். மனம் மாற்றம் இல்லையேல் மன்னிப்பு இல்லை. எனவே மனம் மாறுவோம், மன்னிப்பு பெறுவோம்.

ஜோன் றொபேர்ட்



LOLC

☎ 011 5 880 700 / 011 5 880 600
✉ inquiries@lankaorix.com

"டக்காலா லீசிங்" ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

டக் காலா Leasing



நீங்களும் LOLC "டக்காலா" leasing ஒன்றை பெற்று "ரூங்" என்று காரில் செல்லுங்கள்

- உங்களுக்கேற்ற வாடகைகள்
- விரைவு மற்றும் சினேகபூர்வமான சேவை
- நிறுவனத்தாலேயே காப்புறுதி மற்றும் மதிப்பீடு
- நாடளாவிய ரீதியில் கிளைகள் வலையமைப்பு

Rediffusion - Y&R

# S.P.N. Motors

HONDA MD 90
HONDA Lanser 90
Safari 49cc,
Motor Cycles

விவசாய
உபகரணங்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளவும்



எஸ்.பி.என்
மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்




## ஆகக்கூடிய அடகுக் கடன்
## கைநிறைய வெகுமதிகள்

HNB அடகுச் சேவையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் உங்களுக்கு, நீங்கள் பெறும் கடன் தொகைக்கேற்ப அற்புதமான பரிசுகள்! பெறுமதிமிக்க பயணப் பொதிகள், கவர்ச்சிகரமான குடைகள் மற்றும் வண்ண வண்ணப் பேனாக்களை நன்றி உபகாரமாக வழங்க HNB அடகுச் சேவை இப்போது ஆயத்தமாக இருக்கிறது.

HNB

# அடகு வைக்கும் வசதி




**உங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்:**

- ஆகக்கூடிய கடன் தொகை
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தங்க நகைகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பு
- கொடுக்கல் வாங்கலில் பூரண இரகசியத் தன்மை

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 266 1966

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது


HATTON NATIONAL BANK HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி



சி.ஏச்.ஏ. நிறுவனத்தினால் மண்டைதீவுப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 260 குடும்பங்களுக்கு சுகாதாரப்பொதி நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் சி.ஏச்.ஏ. நிறுவன அதிகாரிகள் பயனாளிக் குடும்பங்களின் விபரங்களை பதிவு செய்வதையும் கிராம அலுவலர் பயனாளி ஒருவருக்கு சுகாதாரப் பொதி வழங்குவதையும் பயனாளிகளில் ஒரு சிலரையும் படங்களில் காணலாம்.

# பத்திரிநாத்- அனிருதா அபாரம் சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி



(டர்பன்)

பத்திரிநாத் அனிருதாவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்ரல் டிஸ்ரிக் அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் சம்பியன் லீக் இருபது - 20 கிரிக்கெட் தொடரில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றில் மூன்றாவது போட்டியில் பிரிவு ஏ ஐச் சேர்ந்த இந்தியாவின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் நியூசிலாந்தின் சென்ரல் டிஸ்ரிக் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பத்திரிநாத் - அனிருதாவின் சிறப் பான இணைப்பாட்டத்தின் மூலம் 20 ஓவர் களில் 4 விக்கெட்டுக் களையிழந்து 151 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சுப்பிரமணியம் பத்திரிநாத் ஆட்டமிழக்காமல் 42 பந்துகளில் (4 பவுண்டரிகள்;2 சிக்ஸ்சர்கள் உட்பட) 52 ஓட்டங்களையும் அனிருதா 29 பந்துகளில் (5 பவுண்டரிகள்; ஒரு சிக்ஸ்சர் உட்பட) 42 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் ஆட்டமிழக்காமல் 15 பந்துகளில் (ஒரு பவுண்டரி;2 சிக்ஸ்சர்கள் உட்பட)26 ஓட்டங்களையும் முரளி விஜய் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரேழ்வெல் 2 விக்கட்டுக்களையும் மாஷன், மில்ன் ஆகியோர் தலா ஒருவிக்கட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு இருபது ஓவர்களில் 152 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப் பெடுத்தாடிய சென்றல் டிஸ்ரிக் அணி 18.1 ஓவர்களில் 94 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் ஹவ் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் லக்ஸ்மிபதி பாலாஜி 3 விக்கெட்டுக்களையும் பெல்லிங்கர், அஸ்வின், முரளிதரன் ஆகியோர் தலா 2 விக்கட்டுக்களையும் அல்வி மோர்கல் ஒரு விக்கட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியன் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஏ பிரிவில் 2 புள்ளியை பதிவு செய்துள்ளது.

# வாரியஸ் இலகு வெற்றி வயம்ப அணி ஏமாற்றம்

(போர்ட் எலிசபத்)

வயம்ப அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வென்றது வாரியஸ் அணி.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில் பிரிவு ஏ ஐச் சேர்ந்த இலங்கையின் வயம்ப அணியும் தென்னாபிரிக்காவின் வாரியஸ் அணியும் மோதின.

இப்போட்டியில்நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வயம்ப அணி குலதுங்காவின் அரைச்சதத்துடன் 20 ஓவர்கள்நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குலதுங்க 44 பந்துகளில் (6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 59 ஓட்டங்களையும் பெரேரா 24 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.மஹேல ஜெயவர்த்தனா பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் தெரோன் 3 விக்கெட்டுக்களையும் நிற்னி 2 விக்கெட்டுக்களையும் ரிசோற் கோப், போத்தா, போயே ஆகியோர்



தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 154 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய வாரியஸ் அணி 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 156 ஓட்டங்களை குவித்து 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வென்றது.

இதில் மார்க் பௌச்சர் ஆட்டமிழக்காமல் 26 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 40 ஓட்டங்களையும் கேரியூஸ்ச் ஆட்டமிழக்காமல்29 பந்துகளில் (2 பவுண்பரிகள் உட்பட) 37 ஓட்டங்களையுடம் இங்ராம் 34, ஜோக்கப்ஸ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வெலகெதர, மெண்டிஸ், ஹேரத், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இவ் வெற்றியின் மூலம் ஏ பிரிவிலுள்ள வாரியஸ் அணி 2 புள்ளிகளைப் பதிவுசெய்தது.

இப் போட்டியில் வாரியஸ் அணியின் வெற்றிக்கு வழிசமைத்த தெரோன் ஆட்டநாயநாயகனாகத் தெரிவானார்.

# மும்பை இந்தியன்ஸ் அணியை 9 ஓட்டங்களால் வீழ்த்தியது லயன்ஸ்




(ஜோகனஸ்பேர்க்)

சம்பியன் லீக் முதலாவது போட்டியில் லயன்ஸ் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

உள்ளூர் போட்டிகளில் சம்பியனான பத்து அணிகள் மோதும் சம்பியன்லீக் இரண்டாவது இருபது - 20 கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. முதலாவது போட்டியில் இதில் நேற்று முன்தினம் பிரிவு பி யைச் சேர்ந்த இந்தியாவின் மும்பை இந்தியன்ஸ் அணியும் தென்னாபிரிக்காவின் லயன்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் வான்டியார் 48 பந்துகளில் (4 பவுண்டரிகள்,3 சிக்ஸ்சர்கள் உட்பட) 71 ஓட்டங் களையும் மக்கன்சி ஆட்டமிழக்காமல் 30 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 56 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மலிங்க 3 விக்கெட்டுக்களையும் மோர்டஷா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 187 ஓட்டங்களை எடுத்தால்வெற்றிஎன்ற இலக்குடன்துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி டெண்டுல்கர் அசத்தியும் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் சச்சின் டெண்டுல்கர் 42 பந்து களில் (9 பவுண்டரிகள் உட்பட) 69 ஓட்டங்களையும் டவான் 32, டுமினி30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பர்கர் 2 விக்கெட்டுக்களையும் பான்கிசோ,புரூன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பி பிரிவில் லயன்ஸ்அணி24 புள்ளிகளைப் பதிவு செய்து முதலிடத்தில் உள்ளது.

இப் போட்டியில் லயன்ஸ்அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த வான்டயர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.


## கண்ணீர் அஞ்சலி



**யதகுலசிங்கம் வைகுந்தன்**

அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி அறிந்து கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

றோயல் பேக் ஹவுஸ்
கண்டி வீதி
சாவகச்சேரி

றோயல் பேக்கரி
பெருங்குளம் சந்தி
சாவகச்சேரி

(C-1149)

# ஈழப் போராட்ட இலட்சியம் என்றும் தோற்றுப் போகாது

## வை.கோபாலசாமி முழக்கம்

(சென்னை)

வரலாறு காணாத துயரமும் துன்பமும் ஈழத்தில் அரங்கேறியுள்ளது. தமிழர்களது விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை வகித்த பிரபாகரன் உருவப்படத்தை எங்கும் வைக்கக் கூடாது என தமிழக அரசு கூறுகின்றது.

அதேசமயத்தில் ஈழத்தில் இலட்சக் கணக்கான மக்கள் உயிரிழக்கக் காரணமான போருக்குத் தலைமை வகித்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு வந்தால் ராஜமரியாதை வழங்கப்படுகின்றது.

கோவை சிங்கநல்லூரில் ம.தி.மு.க. கட்சி நிர்வாகி இல்ல திருமண விழா நடைபெற்றது. இந்தச் சுயமரியாதைத் திருமணத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய வை.கோபாலசாமி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஈழத் போராட்ட வரலாற்றில் சிறிய பின்னடைவு ஏற்பட்டாலும் எத்தகைய சூழலிலும் ஈழப் போராட்ட இலட்சியம் மட்டும் தோற்காது.

அண்ணா திராவிட நாடு கோரி கடுமையாகப் போராடிய கால கட்டத்தில் அவருக்கு எதிராகப் பல பொலிஸ் அதிகாரிகள் செயற்பட்டனர்.

முதல்வரான தனக்கு எதிராகச்செயற்பட்ட அதிகாரிகளை அண்ணா பழிவாங்கவில்லை.அதற்குப் பதிலாக அவர்களுக்குப் பதவி உயர்வை வழங்கினார்.

தன்னலமற்ற அந்தத் தலைவருக்குப் பிறகு வந்த தலைமை சுயநல நோக்குடன் மட்டுமே செயற்படுகின்றது என்றார். (ந-5)

## இளவாலை...

இரு அணிகளும் கடந்த முறையும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றதுடன் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி கடந்த 2008 ஆம் ஆண்டு சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் வவுனியா ரம்பைக்குளம் கொன்மன்ட் மூன்றாம் இடத்தையும் இளவாலை கொன்மன்ட் நான்காம் இடத்தை யும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஐந்தாம் இடத்தையும் பெற்றுச் சிறப்பித்துள்ளன. (ந-5)

## ஐ.தே.கட்சி...

கட்சியின் தீர்மானங்களுக்கு முரணாக சிலர் செயற்படுவதால் கட்சி பலமிழந்து விடாது என அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## இலங்கை அரசியலமைப்புத்...

ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கான கட்டுப்பாட்டை நீக்குவதுடன் பொலிஸ், நீதிச் சேவை, தேர்தல் ஆணைக்குழு முதலானவற்றுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கும் ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரத்தை வழங்கும் அரசியல் அமைப்பு திருத்தம் கடந்த புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இத் திருத்தங்கள் சமநிலைத் தன்மையை பலவீனமாக்குவதுடன் அரசியல் அமைப்பு ஜனநாயகத்தின் கொள்கைகளைப் பலவீனப்படுத்துவதாகவும் உள்ளமை குறித்து அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் பி.ஜே.கிராவ்லி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சுயாதீன நிறுவனங்களைப் பலப்படுத்துமாறும் வெளிப்படைத்தன்மையையும் தேசிய நல்லிணக்கத்தையும் அதிகரிக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை கிராவ்லி கோரி யுள்ளார்.

இதேவேளை இலங்கையின் அரசியல் மாற்றம் குறித்து இந்தியாவிடமிருந்து அமெரிக்கா அறிக்கை கேட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கிளிநொச்சி மீள் நிர்மாணத் திட்டம் பயனாளிகளுக்கான கொடுப்பனவு

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மானத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணியளவிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள நேர்ப் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

காலை 8.30 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு, முற்பகல் 10 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கும் முற்பகல் 11 மணிக்கு பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கும் நண்பகல் 12 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

எனவே பயனாளிகள் தமக்கு ஒதுக்கப்பட்ட நேர ஒழுங்குக்கு அமைவாகத் தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதித் திட்டப் பணிப்பாளர் ப. தெய்வேந்திரம் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-3)

## அமைச்சர்...

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அவசர செயற்பாட்டு நிலையத்தையும் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி திறந்து வைப்பார் என மேலதிக அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோ. சைக்கிள்; சாவகச்சேரி நீதிமன்ற ஊழியர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மரத்துடன் மோதிய சம்பவத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் நுணாவில்குளம் கண்ணகை அம்மன் கோவில் சந்தியில்இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசரத்தினம் செந்தில்பிரகாஷ் (வயது-29) என்ற சாவகச்சேரி நீதிமன்ற ஊழியரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.